www.padippakam.com

டிசம்பர் 2009
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## முல்லைப் பெரியாறு:

# கருணாநிதியின் துரோகம்!
# சி.பி.எம்.-இன் பித்தலாட்டம்!

படிப்பகம்



தஞ்சையில்...

# “முதலாளித்துவம் மக்களைக் கொல்லும்!” “மக்களைக் காக்கும் கம்யூனிசமே வெல்லும்!”

## -புரட்சிகர அமைப்புகளின் நவம்பர் புரட்சி நாள் சூளுரை

நவம்பர் 7, 1917. முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறித்து, இவ்வுலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி மலர்ந்த நாள். அன்றைய ரஷ்யாவில் பாட்டாளிகளின் - பஞ்சைப்பராரிகளின் முதல் சோசலிச அரசு உதித்த நாள்.

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், தமது தோழமை அமைப்புகளுடன் இணைந்து, தாங்கள் செயல்படும் பகுதிகளில் நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கும் இந்து மத வெறி பாசிசத்துக்கும் எதிரான விழாவாக, புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்கச் சூளுரைக்கும் விழாவாக, 92-ஆம் ஆண்டு சோசலிசப் புரட்சி நாளையும், மகத்தான சீனப் புரட்சியின் 60-ஆம் ஆண்டுவிழாவையும் பேருற்சாகத்தோடும் உணர்வோடும் தமிழகமெங்கும் கொண்டாடின.

**சென்னையில்,** சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் நண்பர்களும் குடும்பத்தோடு கொட்டும் மழையிலும் 500 பேருக்கும் மேலாக அணிதிரண்டு, குரோம்பேட்டையில் திருமண அரங்கமொன்றில் நவம்பர் புரட்சிநாள் விழாவை நடத்தினர். நிகழ்ச்சியின் தொடக்கமாக, பாரதிதாசனின் ''காடு களைந்தோம்...'' எனும் பாடலுக்கு, பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட ஆற்றலை வெளிப்படுத்தும் வண்ணம் எழுச்சியோடு ஆடினர், கல்லூரி மாணவர்கள். ம.க.இ.க. தோழர்களின் ''மாவீரன் பகத்சிங்'' எனும் நாடகமும், உலக மேலாதிக்க ரவுடி அமெரிக்காவின் டவுசர் கிழிந்து கிடப்பதை ''மூஞ்சப் பாரு... முதலாளித்துவம்'' முதலான பாடல்கள் மூலம் எள்ளிநகையாடிய பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சியும் அரங்கை அதிர வைத்தன. பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தூரிகையை ஆயுதமாக்கி, முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கும் அமெரிக்க மேலாதிக்கத்துக்கும் எதிராக வரைந்திருந்த ஓவியங்கள் அரங்கில் போராட்டக் கனல் மணக்கச் செய்தன. சிறப்புரையாற்றிய பு.ஜ.தொ.மு. மாநில இணைச் செயலர் தோழர் பழனிநாதன், இன்றைய உலகளாவிய நெருக்கடிகளுக்குப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியே ஒரே தீர்வு என்பதை உணர்த்தினார்.



**திருச்சியில்,** புரட்சிகர அமைப்புகளுடன் ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கமும், பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனும் இணைந்து நடத்திய நவம்பர் புரட்சிநாள் விழா, மாணவர்களின் பறைமுழக்கத்துடன் தொடங்கியது. சோசலிசப் புரட்சியின் சாதனைகளையும் முதலாளித்துவத்தின் கொடூரத்தையும் விளக்கி முன்னணியாளர்கள் எழுச்சிமிகு உரையாற்றினர். ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிங்கம் பகத்சிங், கட்டபொம்மனைப் போல காலனியாதிக்கவாதிகளை எதிர்த்துப் போரிட்ட அரசி ஹஸ்ரத் மஹல், தந்தை பெரியார், அரசு பயங்கரவாத சல்வா ஜுடும் குண்டர்படையை எதிர்த்துப் போராடும் பழங்குடியினக் கம்யூனிசப் போராளி என சிறுவர்கள் மாறுவேடமணிந்து வந்து நடத்திய நிகழ்ச்சியும், ''தூங்குறியா நடிக்கிறயா... ரெங்கநாதா!'' என்று திருவரங்கக் கோயிலில் அனந்த சயனத்தில் கிடக்கும் ஆண்டவனை எள்ளிநகையாடும் தீண்டாமை எதிர்ப்பு பாடல் நிகழ்ச்சி மற்றும் சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் போராட்ட உணர்வூட்டி, பெருந்திரளாக வந்திருந்திருந்த பார்வையாளர்களிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றன. நவம்பர்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

சென்னையில்...




www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 25 இதழ்: 2

டிசம்பர் 2009

உள்நாடு

தனிஇதழ்: ரூ. 7.00

ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561


# விவசாயிகள் - மீனவர்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் கருப்புச் சட்டங்கள்

தனியார்மய-தாராளமயத் தாக்குதலை மேலும் மூர்க்கமாகத் தீவிரப்படுத்தக் கிளம்பிவிட்டனர் காங்கிரசு துரோகிகள். பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைத்துள்ள திமிரில், உழைக்கும் மக்கள் மீது அடுத்தடுத்து தாக்குதல்களைக் கட்டவிழ்த்துவிடவும் துணிந்துவிட்டனர்.

தனியார் சர்க்கரை ஆலை முதலாளிகளின் கொள்ளைக்காகவும், வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதியைத் தாராளமயமாக்கவும், மாநில அரசுகளுக்குப் பெயரளவில் இருந்த அதிகாரங்களைப் பறிக்கவும், நாடு முழுவதும் ஒரே மாதிரியான கொள்முதல் விலையைக் கொண்டுவருவது என்ற பெயரில், அக்டோபர் இறுதியில் கரும்பு விலை நிர்ணய அவசரச் சட்டத்தை மைய அரசு அறிவித்தது. கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ.1298 எனத் தன்னிச்சையாகக் கொள்முதல் விலையை நிர்ணயித்து, இந்த "நியாய-ஆதார" விலைக்கு மேல், மாநில அரசுகள் பரிந்துரை விலையை அறிவித்தால், இந்த விலை வித்தியாசத்தை மாநில அரசுகள்தான் ஏற்க வேண்டும்; சர்க்கரை ஆலைகள் மீது இதைச் சுமத்த முடியாது என்று இச்சட்டம் கூறுகிறது. இதை ஏற்க மறுத்து, கரும்பு விவசாயிகளைத் திரட்டி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. அதைத் தொடர்ந்து, இச்சட்டத்தின் 5-ஏ விதி திருத்தப்பட்டு, எதிர்க்கட்சிகளின் ஆதரவோடு புதிய மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளது. இந்த ஒரு விதியில் மட்டுமே சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளனவே தவிர, கரும்பு விவசாயத்தையும் விவசாயிகளையும் போண்டியாக்கும் கொள்முதல் விலை மற்றும் பிறவற்றில் எந்த மாற்றமுமில்லை.

இதேபோல, மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறை மசோதா (2009), நடப்பு நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்படவுள்ளது. நாட்டின் கடலோர எல்லைக்கு வெளியே, அந்நிய-பன்னாட்டு ஏகபோக பெரும் மீன்பிடி நிறுவனங்கள் கடல் வளத்தை வரைமுறையின்றிச் சூறையாடவே இக்கருப்புச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இம்மசோதாவின் விதிகளின்படி, இனி மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்க முன் அனுமதி பெற வேண்டும், 12 கடல் மைல்கள் தாண்டி மீன் பிடித்தால் மூன்றாண்டு சிறைத் தண்டனையும், 9 லட்ச ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என்றெல்லாம் மிகக் கொடிய விதிகளைக் கொண்டுள்ள இம்மசோதா சட்டமாக்கப்பட்டால், இனி மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கவே முடியாமல் அவர்களின் வாழ்வுரிமை முற்றாக அழியும்.

இக்கொடிய சட்டங்களை விஞ்சும் வகையில், நிலம் கையகப்படுத்துதல் திருத்த மசோதா (2007), நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சட்டமாக நிறைவேற்றப்படவுள்ளது. இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகவும் பெருந்தொழில் நிறுவனங்களுக்காகவும் தனியார் -அந்நியப் பெரு முதலாளிகள் விவசாயிகளிடமிருந்து 70% நிலத்தை நேரடியாகக் கையகப்படுத்தலாம். எஞ்சிய 30% நிலத்தை அரசு கையப்படுத்தித் தரும். பணபலமும் அரசியல்-அதிகார பலமும் குண்டர்பலமும் கொண்ட பெருமுதலாளிகள், விளைநிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கவும், தரமறுக்கும் விவசாயிகளை உருட்டிமிரட்டி வதைக்கவும் இதன் மூலம் சட்டபூர்வமாக தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. மாவோயிஸ்டு பயங்கரவாதப் பீதியூட்டி, உள்நாட்டுப் போரைக் கட்டவிழ்த்துவிட்டுப் பழங்குடியின மக்களை அவர்களின் மண்ணிலிருந்து பிய்த்தெறிந்துவரும் அரசு, இப்போது சட்டபூர்வமாகவே நிலப்பறிப்பின் மூலம் விவசாயத்தையும் விவசாயிகளையும் ஒழித்துக் கட்டக் கிளம்பியுள்ளது. ஏற்கெனவே, நாட்டின் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு 30 லட்சம் ஹெக்டேராகச் சுருங்கிவிட்ட நிலையில், விளைநிலங்கள் கட்டுப்பாடின்றி பறிக்கப்பட்டால் விவசாயமும் விவசாயிகளும் நாசமாவது மேலும் தீவிரமாகும்.

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, உள்நாட்டுத் தரகு முதலாளிகள்-பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் சூறையாடலுக்கும் மேலாதிக்கத்துக்கும் ஏற்ற வகையில் பொருளாதாரத்தை மாற்றியமைக்க, இந்திய ஆட்சியாளர்கள் கிளம்பியுள்ளனர். போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் மறைமுக ஆதரவோடு, அவசரமாகவும் மூர்க்கமாகவும் அடுத்தடுத்து கொண்டுவரப்படும் இக்கருப்புச் சட்டங்களால் உழைக்கும் மக்களின் எதிர்கால வாழ்வின் மீது அணுகுண்டு வீசப்பட்டு, நாடு நாலுகால் பாய்ச்சலில் மறுகாலனியாக்கப்படுகிறது. அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களின் எதிர்கால வாழ்வைக் காவுகொள்ளக் கிளம்பியுள்ள தனியார்மயம்-தாராளமயத்துக்கு எதிராக, நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராக புரட்சிகர-ஜனநாயக சக்திகள் போர்க்குணத்தோடு போராட வேண்டிய தருணமிது.



படிப்பகம்

www.padippakam.com

## முல்லைப் பெரியாறு:

# கருணாநிதியின் துரோகம்! சி.பி.எம்.-இன் பித்தலாட்டம்!

**தமிழக மக்கள், கேரளா மீது பொருளாதாரத் தடையை விதிப்பதன் மூலம்தான், முல்லைப் பெரியாறு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.**

**து**ரோகம்! பதவி சுகத்துக்காக நடந்துள்ள அப்பட்டமான துரோகம்! தமிழகத்தின் ஐந்து தென் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமான முல்லைப் பெரியாறு அணை நீரில், தமிழகத்தின் நியாயவுரிமையைக் காவு கொடுத்து விட்டார், 'தமிழினத் தலைவர்' கருணாநிதி.

முல்லைப் பெரியாறு அணையில் மெல்லிய அதிர்வு ஏற்பட்டதைப் பூதாகரமாக்கிப் பீதியூட்டி, 1979 முதல் கடந்த 30 ஆண்டுகளாக பெரியாறு நீரில், தமிழகத்தின் நியாயவுரிமையை கேரளம் தொடர்ந்து மறுத்து வருகிறது. இது தொடர்பாக இரு மாநில அரசுகளும் தொடுத்த வழக்குகள் 1998-இல் எடுத்துக் கொள்ளப்பட்டு, எட்டாண்டு இழுத்தடிப்புகளுக்குப் பிறகு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்று உச்சநீதி மன்றம் கடந்த 27.2.2006 அன்று தீர்ப்பளித்தது.

அத்தீர்ப்பை ஏற்க மறுத்து, முடக்கும் வகையில் 15.3.2006 அன்று கேரள அரசு புதிய சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்தது. இதை எதிர்த்து மார்ச் 2006-இல் உச்சநீதி மன்றத்தில் தமிழக அரசு வழக்கு தாக்கல் செய்தது. அதன் பிறகு, உச்சநீதி மன்றம் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்பை மறுஆய்வு செய்யவேண்டுமென்று கேரள அரசு மனுதாக்கல் செய்தது. இந்த வழக்குகளின் விசாரணை முடிவுக்கு வரும் நிலையில், இந்த வழக்குகளை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட அமர்வுக்கு மாற்ற, உச்சநீதி மன்றம் கடந்த நவம்பர் 10-ஆம் தேதியன்று உத்தரவிட்டுள்ளது.

கேரள அரசின் சட்டத் திருத்தம் செல்லுமா என்ற வழக்கில், ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பட்ட வழக்கையும் சேர்த்து, பெரியாறு அணையில் 142 அடி நீரைத் தேக்கும் உரிமைக்கு உச்சநீதி மன்றம் வேட்டு வைத்துவிட்டது. முப்பதாண்டு காலப் போராட்டத்தை, உச்சநீதி மன்ற உத்தரவு இப்போது மறுபடியும் ஆரம்ப நிலைக்கே கொண்டு வந்துவிட்டது. முல்லைப் பெரியாறு அணை வழக்கில் கேரள அரசு, மத்தியிலுள்ள காங்கிரசு அரசு, உச்சநீதி மன்றம் ஆகிய மூன்றும் ஓரணியில் நின்று தமிழகத்தின் நியாயவுரிமைக்கு அநீதியிழைத்து வருகின்றன. இத்தனைக்கும் பிறகும் அமைதி காக்கிறார், கருணாநிதி.

வழக்குகள் விசாரணையில் உள்ளபோதே, முல்லைப் பெரியாறு அணை அருகே புதிய அணை கட்டுவதற்காக ஆய்வு செய்ய, கேரள அரசுக்கு அனுமதி அளித்த மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷைக் கண்டித்து மதுரையில் நவம்பர் முதல் நாளன்று மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தப் போவதாக அறிவித்தார் கருணாநிதி. உடனே, மைய தொலைத் தொடர்பு அமைச்சர் ராஜாவின் அலுவலகங்களில் 'மையப் புலனாய்வுத் துறை சோதனை' என்ற நாடகத்தை காங்கிரசு எஜமானர்கள் ஏவி விட்டனர். அரண்டு போன கருணாநிதி, முல்லைப் பெரியாறு தொடர்பான மதுரை கூட்டத்தையே ரத்து செய்துவிட்டார். இதன் மூலம், தனது சரணாகதி சமிக்ஞையை டெல்லி எஜமானர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.

கேரள அரசு புதிதாகச் சட்டம் போட்டதை எதிர்த்தும், மைய அரசின் வஞ்சகத்தை எதிர்த்தும் எதுவும் செய்யாத கருணாநிதி, பிரச்சினையை இப்போது ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்ச் விசாரிக்கும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டதைக் கண்டு முதலைக் கண்ணீர் வடிக்கிறார். இப்போது மீண்டும் இழுத்தடிப்புக்கான உத்தரவு வந்ததும், ''உச்சநீதி மன்றத்

முல்லைப் பெரியாறு அணையைக் கைகழுவிவிட்டு, புதிய அணையைக் கட்டக் கோரி கேரள கத்தோலிக்க இளைஞர் இயக்கம் கடந்த செப்டம்பர் மாதம் திருவனந்தபுரத்தில் நடத்திய பேரணி: தமிழர்களுக்கு எதிரான குறுந்தேசியவெறி.






படிப்பகம்



முல்லைப் பெரியாறு நீரில் தமிழகத்தின் உரிமை கோரும் நாடகம்: ஓட்டுக்காகப் பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவின் பின்னே நின்றுகொண்டு கருணாநிதியைச் சாடி, வைகோ நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

தீர்ப்புக்கு எதிராகச் செயல்படும் கேரள முதல்வர் அளவுக்கு எனக்குத் தைரியம் இல்லை'' என்று அறிக்கை வெளியிடுகிறார்.

நவம்பர் 10-ஆம் நாளன்று உச்சநீதி மன்றத்தில் இப்படியொரு உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பாக, தமிழக அரசின் சார்பில் வாதாடிய வழக்குரைஞர் பராசரணிடம் ''இந்த உத்தரவை ஏற்றுக் கொள்கிறீர்களா?'' என்று நீதிபதிகள் கேட்டபோது, அவர் மறுப்பு தெரிவித்திருக்கிறார். பின்னர், மதியம் மீண்டும் நீதிமன்றம் கூடியபோது, உத்தரவை ஏற்பதாக அறிவித்திருக்கிறார். இடைப்பட்ட நேரத்தில் நடந்தது என்ன? அவர் தன்னிச்சையாக இப்படி முடிவை மாற்றிக் கொள்ள முடியுமா? அல்லது, கருணாநிதியின் ஒப்புதல் இல்லாமல் இப்படி நடந்திருக்கத்தான் முடியுமா? இப்போது ஒப்பாரி வைத்து அறிக்கை வெளியிடும் கருணாநிதி, அன்று இந்த உத்தரவை நாங்கள் ஏற்கவில்லை என்று அறிவிக்க வேண்டியதுதானே! அதைவிட்டு இப்போது கண்ணீர் அறிக்கை வெளியிடுவது யாரை ஏமாற்ற?

இந்தத் துரோகம் கருணாநிதியோடு முடிந்துவிடவில்லை. 1980-இல் தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். தமிழக போலீசிடம் இருந்த முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்புப் பொறுப்பை கேரளப் போலீசுக்குத் தாரை வார்த்தார். 1980-லிருந்தே முல்லைப் பெரியாறு அணையைப் பலப்படுத்த போடப்பட்ட ஒப்பந்தத்தை மீறி, கட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட ஊழியர்கள் - பொறியாளர்களைத் தாக்கியும், கைது செய்தும், வாகனங்களைப் பறிமுதல் செய்தும் வழக்கு போட்டும் கேரள அரசு தொடர்ந்து தொல்லைகள் கொடுத்து வந்தது. இருப்பினும் எம்.ஜி.ஆரும் அதன் பிறகு ஜெயலலிதா, கருணாநிதியும் இவற்றுக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல், குறைந்தபட்சம் கேரள அரசுக்குக் கண்டனம்கூடத் தெரிவிக்காமல், தொடர்ந்து தமிழகத்துக்குத் துரோகமிழைத்தே வந்துள்ளனர். பெரியாறு அணையைப் பராமரித்து இயக்குவது, படகு விடுவது, அணைக்கான பாதைகளைப் பயன்படுத்துவது — எனப் பல உரிமைகளை கேரளத்துக்குத் தாரை வார்த்திருக்கின்றனர். முல்லைப் பெரியாறு அணை தொடர்பான வழக்கில், உச்சநீதி மன்றத்தில் கேரள அரசின் வழக்குரைஞர் 31 முறை வாய்தா கேட்டு இழுத்தடித்த போதிலும், தமிழக ஆட்சியாளர்கள் அதை எதிர்த்து வாயே திறக்கவில்லை.

இப்போது கருணாநிதியின் துரோகம் அம்பலமானதும், ஏதோ அவரால்தான் தமிழகத்தின் உரிமை பறிபோய் விட்டது போலக் கூப்பாடு போடுகிறார் ஜெயலலிதா. கேரள தேர்தலில் அ.தி.மு.க. போட்டியிட்ட தொகுதிகளில் ''முல்லைப் பெரியாறில் நீரைத் தேக்கவிட மாட்டோம்!'' என்று வாக்குறுதி அளித்து ஓட்டுப் பொறுக்கிவிட்டு, இப்போது தமிழகத்தின் உரிமைக்காகப் போராடுவதாகப் பாசாங்கு செய்கிறார். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி நீரைத் தேக்கலாம் என்று உச்சநீதி மன்றம் 27.2.2006 -இல் தீர்ப்பளித்தபோது ஆட்சியிலிருந்தவர் ஜெயலலிதாதான். ''அப்போது கோடைகாலமாக இருந்ததால் தீர்ப்பை செயல்படுத்த முடியவில்லை'' என்று இப்போது தனது துரோகத்துக்குப் புதுவிளக்கம் அளித்துக் கொண்டிருக்கிறார்.

''பதவி பேரத்தில் பாழான தமிழக உரிமைகள்'' என்று கருணாநிதியை மட்டும் குறிவைத்து தாக்கி, தினமணியில் கட்டுரை எழுதுகிறார், பழ.நெடுமாறன். ''தி.மு.க. அரசு தேவையில்லாமல் மைய அரசிடம் பிரச்சினையை எழுப்புகிறது. அண்டை மாநிலங்களுக்கிடையே வெறுப்பையும் முரண்பாட்டையும் தோற்றுவிப்பதை தமிழக ஆட்சியாளர்கள் நிறுத்த வேண்டும்'' என்று கருணாநிதியைக் குறிவைத்துத் தாக்குகிறார், வலது கம்யூனிஸ்டு கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளரான பரதன். ''கருணாநிதியின் துரோகத்தால் தமிழகம் பாலைவனமாக மாறும்'' என்று ஜெயலலிதாவின் பின்னே நின்று கொண்டு சீறுகிறார், வைகோ.

கருணாநிதி மட்டுமல்ல; அவருக்கு முன்பிருந்தே, எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா ஆட்சிகளில் கேரள அரசுக்கும் மைய அரசுக்கும் துணைநின்று தமிழகத்தின் நியாயவுரிமை பறிகொடுக்கப்பட்டுள்ளது என்ற உண்மையை இவர்கள் திட்டமிட்டே மறைக்கின்றனர். பெரியாறு அணை பற்றி செய்திகள் அடிபடும்போது, பரபரப்பாக அறிக்கை வெளியிடுவதும், அடையாள எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதும், அதன் பிறகு வாய்மூடிக் கிடப்பதுமாக வைகோ வகையறாக்கள் சூரத்தனம் காட்டுகின்றன.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கருணாநிதியின் துரோகம் ஒரு பங்கு என்றால் ஒன்பது பங்கு துரோகத்தை புரட்சி பேசும் சி.பி.எம். கட்சி செய்து கொண்டிருக்கிறது. ''உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!'' என்று சர்வதேசியம் பேசி சவடால் அடிக்கும் இக்கட்சி, ஓட்டுக்காக முதலாளித்துவ இனவெறியைத் தூண்டிவிட்டு குளிர்காய்ந்து கொண்டிருக்கிறது. கேரள மக்களுக்காக, தமிழக விவசாயிகள் உற்பத்தி செய்து அனுப்பும் உணவு தானியங்கள்-காய்கறிகள் முதலானவற்றுக்குத் தேவையான நீரின் அளவு 511 டி.எம்.சி.யாகும்.

www.padippakam.com

அந்த அளவுக்கான நீரையாவது தமிழகத்துக்குத் தர வேண்டும் என்ற நியாய உணர்வு கூட அக்கட்சியிடம் இல்லை. நிபுணர்கள் ஆய்வு செய்து அணை வலுவாக உள்ளது என்று அறிவித்துள்ள போதிலும், பெரியாறு அணையில் நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளதாக திரித்துச் சொல்லி பயபீதியூட்டியும், குறுகிய தேசிய இனவெறியைக் கிளப்பிவிட்டும், புதிய அணை கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தி இடுக்கி அணைக்கு நீரைக் கொண்டு செல்ல கேரள 'இடதுசாரி' அரசு விழைகிறது. இதன்மூலம் அணையைத் தனது பொறுப்பில் வைத்துக் கொண்டு, தமிழகத்தின் ஐந்து தென்மாவட்டங்களைப் பாலைவனமாக்கத் துடிக்கிறது.

இவ்வளவுக்குப் பின்னரும், இரு மாநில அரசுகளும் இணக்கமாகப் பேசித் தீர்க்க வேண்டும் என்று அக்கட்சியின் மையத் தலைமை உபதேசம் செய்து, தமிழகத்தின் நியாயவுரிமையை மறுக்கிறது. ''முல்லைப் பெரியாறு பிரச்சினையை அரசியலாக்கி ஆதாயம் தேடத் தமிழக அரசியல்வாதிகள் கீழ்த்தரமாக முயற்சிக்கிறார்கள்''



கருணாநிதியின் துரோகம் ஒரு பங்கு என்றால், ஒன்பது பங்கு துரோகத்தை சி.பி.எம். கட்சி செய்துவருகிறது; ஓட்டுக்காக முதலாளித்துவ இனவெறியைத் தூண்டிவிட்டுக் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறது, சி.பி.எம்.



என்று சாமியாடுகிறார் கேரள போலி கம்யூனிஸ்டு முதல்வர் அச்சுதானந்தன். தமிழகத்தின் நியாயவுரிமையைக் கோருவது அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியாம்! கேரள 'இடதுசாரி' அரசின் அடாவடித்தனத்தை எதிர்க்க முன்வராத சி.பி.எம்.கட்சி, தமிழகத்தில் விவசாயிகளின் உரிமைக்காக விவசாய சங்கம் கட்டவும், போராடவும் ஏதாவது அருகதை இருக்கிறதா? தமிழகத்தின் நியாயவுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து சி.பி.எம்.கட்சியின் தமிழ் மாநிலக்குழு எந்தப் போராட்டத்தையும் நடத்தியதில்லை. கேரள 'இடதுசாரி' அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்து கட்சியின் மத்தியக் கமிட்டியில் வாதிட்டதுமில்லை. இத்துரோகக் கூட்டத்தை அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்தாமல், பெரியாறு நீரில் தமிழகத்தின் நியாயவுரிமையைச் சாதிக்க முடியுமா? ஆனால், கருணாநிதி, ஜெயலலிதா மட்டுமல்ல; எல்லா ஓட்டுக் கட்சிகளும் தேர்தல் கூட்டணிக்காக சி.பி.எம். துரோகக் கூட்டத்தை எதிர்த்து வாயே திறப்பதில்லை. கருணாநிதியின் துரோகத்தைச் சாடும் பழ.நெடுமாறன் வகையறாக்கள், ஜெயலலிதாவையோ சி.பி.எம். துரோகத்தையோ சாடுவதுமில்லை.

நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த ஒரு மாநில அரசு மறுக்கும் போது, மைய அரசு அம்மாநில அரசு மீது இராணுவ நடவடிக்கை உட்பட அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதை மைய அரசு செய்யாத போது, மைய அரசின் எல்லா அதிகாரங்களையும் ஏற்க மறுப்பதற்கு தமிழகத்துக்கு எல்லாவித நியாயமும் உரிமையும் உண்டு. இந்த நியாயத்தையும் உரிமையையும் உறுதி செய்வதுதான் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையாகும். இதுவொன்றுதான், இரு வேறு தேசிய இனங்களைக் கொண்ட அண்டை மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சரியான வழியுமாகும்.

பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்பது, நிரந்தர நீண்டகாலத் தீர்வாக அமையும் ஒரு ஆயுதம். அதேசமயம், தற்போதைய உடனடிப் பணியாக கேரள மாநிலத்துக்கு எதிரான பொருளாதார முற்றுகை, பரம்பிகுளம் - ஆழியாறு - மண்ணாறு போன்ற ஆறுகள் வழியே கேரளத்துக்குச் செல்லும் தண்ணீரை மறுப்பது, சபரிமலை மற்றும் கேரளத்துக்குச் செல்லும் சாலை மற்றும் இரயில் போக்குவரத்தை மறிப்பது போன்ற நடவடிக்கைகளை தமிழக மக்கள் மேற்கொள்ள வேண்டும். கேரளத்திலிருந்து தமிழகத்துக்கு வரும் தண்ணீர் எவ்வளவு முக்கியமோ, அதைப் போல தமிழகத்திலிருந்து கேரளம் அடையும் பொருளாதார உதவியும் முக்கியம் என்பதை அம்மாநில மக்களுக்கு உணர்த்தியே தீர வேண்டும். இது இனவெறியூட்டும் செயல் அல்ல. மாறாக, தமிழகத்தின் நியாயவுரிமையை மறுக்கும் இனவெறி அடாவடித்தனத்துக்குப் பாடம் புகட்டும் செயல்தான்.

நாற்காலி சுகத்திற்காக 'தேசிய ஒருமைப்பாடு' நீரோட்டத்தில் சங்கமித்துவிட்ட தமிழக ஓட்டுக்கட்சி துரோகிகளும், அவற்றின் பின்னே வால்பிடித்துச் செல்லும் தமிழினப் பிழைப்புவாத அமைப்புகளும் இத்தகைய போராட்டங்களை முன்னெடுக்காது. இத்துரோகக் கும்பலைப் புறக்கணித்துவிட்டு, தமிழகத்தின் நியாயவுரிமையை மீட்க, புரட்சிகர-ஜனநாயக சக்திகளின் தலைமையில் அணிதிரண்டு போராட தமிழக மக்கள் முன்வர வேண்டும்.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

சி|வ|ப்|பு|ஞ்|ச|லி

## முனைவர் பாலகோபால்:

# மனித உரிமைகளுக்காகப் போராடிய மாவீரன்!



‘‘நெருக்கடியான தருணத்தில் மனித சமுதாயத்தின் மேன்மைக்காக அயரது பாடுபடுபவன்தான் உண்மையான வீரன்’’ என்றார், செக். நாட்டு கம்யூனிசப் புரட்சியாளரான தியாகத் தோழர் ஜூலியஸ் பூசிக். இந்தியாவின் புரட்சிகர-ஜனநாயக சக்திகள், டாக்டர் பாலகோபால் என்ற வீரனை இழந்து துயரத்தில் தவிக்கின்றன. வாழ்நாள் முழுவதும் உழைக்கும் மக்களின் மனித உரிமைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ‘‘மனித உரிமைப் போராளி’’ முனைவர் பாலகோபால், கடந்த 8.10.09 அன்று கடுமையான நெஞ்சுவலியால் தனது 57-ஆவது வயதில் காலமாகிவிட்டார்.

ஆந்திர மாநிலத்தில் நக்சல்பாரிகளுக்கு எதிரான நரவேட்டை கட்டவிழ்த்துவிடப்பட்டு, போலீசின் கேள்விமுறையற்ற பயங்கரவாதம் தலைவிரித்தாடிய காலம் அது. 1980-களில் இப்பயங்கரவாத பாசிச அடக்குமுறைக்கு எதிராகவும் மனித உரிமையை நிலைநாட்டவும் புரட்சிகர-ஜனநாயக உணர்வு கொண்டோரால் ஆந்திரப் பிரதேச குடியுரிமைக் கழகம் (APCLC) என்ற அமைப்பு தொடங்கப்பட்டு, அவ்வமைப்பு தொடர்ந்து பல போராட்டங்களை நடத்தி, போலீசின் பயங்கரவாதத்தை நாடெங்கும் அம்பலப்படுத்தியது. ஆந்திரப் பிரதேச குடியுரிமைக் கழகத்தை நக்சல்பாரி இயக்கத்தின் ஓர் அங்கமாகவே அரசும் போலீசும் கருதி, அதன்மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டன. போலீசின் இரகசியக் கூலிப்படைகளால் இவ்வமைப்பின் முன்னணியாளர்கள் பலர் அடுத்தடுத்துக் கொல்லப்பட்டு வந்த காலம் அது. உயிருக்கு உத்தரவாதமற்ற சூழல் நிலவிய அக்காலத்தில்தான், 1983-இல் இவ்வமைப்பின் பொதுச் செயலாளராக தோழர் பாலகோபால் பொறுப்பேற்றார். பலமுறை போலீசாரால் தாக்கப்பட்ட போதிலும், தடா வழக்கில் சிறையிடப்பட்ட போதிலும்,டாக்டர் இராமநாதம் முதலான மனித உரிமைப் போராளிகள் அடுத்தடுத்து போலீசாரால் கொல்லப்பட்டபோதிலும், அஞ்சாமல் தொடர்ந்து போலீசு பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடினார், தோழர் பாலகோபால்.

கணிதத்தில் முனைவர் பட்டம் பெற்ற தோழர் பாலகோபால், இந்தியப் புள்ளியியல் கழகத்தில் ஆராய்ச்சியாளராகவும், பின்னர் காகேதிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகவும் பணியாற்றினார். அப்பணிகளை உதறிவிட்டு, பின்னர் ஆந்திரப் பிரதேச குடியுரிமைக் கழகத்தின் முக்கிய தூண்களில் ஒருவராக உயர்ந்து, சட்டம் படித்து வழக்குரைஞராகப் பணியாற்றி, மனித உரிமைக்காக முழுநேரமும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஆந்திராவில் போலீசு பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்-அடக்குமுறைகளுக்கு நடுவே, போலி மோதல் குறித்த உண்மையறியும் குழுவின் மூலம் பல பகுதிகளில் நேரில் சென்று ஆய்வு நடத்தி, போலீசாரின் நரவேட்டையை நாடெங்கும் அம்பலப் படுத்தினார். அப்படுகொலைகளுக்குப் பின்னேயுள்ள பாசிச அரசியலை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில் தோழர் பாலகோபால் முக்கிய பங்காற்றியுள்ளார்.

போலீசின் பயங்கரவாதப் படுகொலைகளுக்கு எதிராக, தேசிய மனித உரிமை ஆணையத்தில் ஆந்திரப் பிரதேச குடியுரிமைக் கழகத்தின் சார்பில் வாதிட்ட தோழர் பாலகோபாலின் தொடர் முயற்சியால், மோதல் கொலைகளில் ஈடுபட்ட போலீசார் தவறு செய்யவில்லை என்று விசாரணையில் நிரூபிக்கப்பட வேண்டும், இல்லையெனில் அப்போலீசார் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 320-வது பிரிவின்கீழ் கொலை வழக்கு தொடரப்பட வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் 1997-இல் தீர்ப்பளித்தது.

எக்னாமிக் அண்டு பொலிடிகல் வீக்லி என்ற ஆங்கில வார இதழில் அரசின் பாசிச அடக்குமுறைகளுக்கு எதிராகவும் மனித உரிமைக்காகவும் அவர் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதி வந்தார். இந்தியாவில் மனித உரிமைப் போராட்ட வரலாற்றில் புதிய தடம் பதித்த போர்குணமிக்க இயக்கமாக ஆந்திரப் பிரதேசக் குடியுரிமைக் கழகத்தை வளர்த்தெடுத்ததில் தோழர் பாலகோபாலுக்கு முக்கிய பங்குண்டு. எனினும், வன்முறை குறித்த அணுகுமுறையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் அவ்வமைப்பிலிருந்து விலகி, மனித உரிமை அரங்கம் (HUMAN RIGHTS FORUM-HRF) எனும் அமைப்பை 1998-இல் தொடங்கி மனித உரிமைக்காகத் தொடர்ந்து போராடி வந்தார்.

மறுகாலனியாக்கம் தீவிரமாகியுள்ள இன்றைய சூழலில், உழைக்கும் மக்களின் உரிமைக்காகவும் பாசிச பயங்கரவாதத்துக்கு எதிராகவும் தொடர்ந்து உறுதியாகப் போராடுவதுதான், நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# கர்நாடகா அரசை ஆட்டுவிக்கும் திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகள்

**கர்நாடகா பா.ஜ.க.விற்குள் நடந்த அதிகாரச் சண்டையை வெறும் கோஷ்டி மோதலாகச் சுருக்கி விட முடியாது!**

கர்நாடகா மாநில முதல்வர் எடியூரப்பாவிற்கும், அவரது ஆட்சியின் அஸ்திவாரமாக இருந்துவரும் சுரங்க முதலாளிகளான ரெட்டி சகோதரர்களுக்கும் இடையே இரண்டு வார காலமாக நடந்து வந்த அதிகாரச் சண்டை, ''கர்நாடகா முதல்வர் எடியூரப்பாவிற்கு நெருக்கமானவரும் அம்மாநிலத்தின் கிராமப்புற மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சருமான ஷோபா கரந்த்லாஜேயைப் பதவியில் இருந்து அகற்றுவது; பெல்லாரி மாவட்டத்தில் இருந்து தூக்கியடிக்கப்பட்ட அதிகாரிகளை மீண்டும் அதே இடத்தில் பணியமர்த்துவது; எடியூரப்பா, ஆட்சி தொடர்பாக எடுக்கும் எந்தவொரு முடிவையும் ரெட்டி சகோதரர்களைக் கலந்து ஆலோசித்து எடுப்பது'' என்ற பேரத்தின் அடிப்படையில் தற்காலிகமாக முடிவுக்கு வந்திருக்கிறது.

''எடியூரப்பாவை முதல்வர் பதவியில் இருந்து நீக்க வேண்டும்'' என்ற ரெட்டி சகோதரர்களின் கோரிக்கையை, பா.ஜ.க. தலைமை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. எடியூரப்பாவை முதல்வர் பதவியில் இருந்து தூக்கியடித்தால், கர்நாடகா மாநிலத்தில் மிகுந்த அரசியல் செல்வாக்கும், வாக்கு எண்ணிக்கையும் கொண்ட லிங்காயத்து சாதியினரைப் பகைத்துக் கொள்ள நேரிடும் என்ற சாதி அரசியல்தான் இதற்குக் காரணமேயொழிய, வேறெந்தக் கொள்கையும் இதன் பின்னணியில் கிடையாது.



பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுஷ்மா சுவராஜ் (வலது) வீட்டில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட கர்நாடகா முதல்வர் எடியூரப்பா (இடது ஓரம்), அவரை எதிர்த்துக் கலகத்தில் இறங்கிய ஜனார்த்தன ரெட்டி (இடமிருந்து இரண்டாவது) மற்றும் பிற பா.ஜ.க. தலைவர்கள்.

ஆர்.எஸ்.எஸ்.க்கு நெருக்கமாக இருந்தவரும், பா.ஜ.க.வில் நீண்ட காலம் பணியாற்றியவருமான ஜஸ்வந்த் சிங்கை ஒரே நொடியில் தூக்கியெறிந்த பா.ஜ.க. தலைமை, ரெட்டி சகோதரர்களைக் கட்சியிலிருந்தும், அரசாங்கத்தில் இருந்தும் தூக்கியெறியத் துணியவில்லை. இதற்குக் காரணம், அச்சகோதரர்களின் பணபலம்!

பா.ஜ.க. கடந்த பத்தே ஆண்டுகளுக்குள் கர்நாடகாவில் ஆட்சியைப் பிடிக்கும் அளவிற்கு 'வளர்ந்துள்ளதற்கு' ரெட்டி சகோதரர்களின் பண பலமும் ஒரு காரணம் என்பதை மூத்த பா.ஜ.க. தலைவர்களால்கூட மறுக்க முடியவில்லை. குறிப்பாக, கடந்த 2008-ஆம் ஆண்டு நடந்த அம்மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு தனித்து ஆட்சி அமைக்கும் அளவிற்கு பெரும்பான்மை பலம் கிட்டவில்லை. எனவே, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மற்றும் சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் குதிரை பேரத்தை, ''தாமரை நடவடிக்கை'' என்ற பெயரில் நடத்தியது, பா.ஜ.க. இந்தக் குதிரை பேரத்திற்குத் தலைமேயேற்றதோடு, அதற்காகப் பல கோடி ரூபாய்களை வாரியிறைத்தார்கள், ரெட்டி சகோதரர்கள். இதற்கு நன்றிக் கடனாக கருணாகர ரெட்டிக்கு வருவாய்த் துறையும், ஜனார்த்தன ரெட்டிக்கு சுற்றுலாத் துறையும், ரெட்டி சகோதரர்களின் நம்பிக்கைக்குரிய அரசியல் தரகனான சிறீராமுலுவிற்கு சுகாதாரத் துறையும் சன்மானமாக அளிக்கப்பட்டன.

எடியூரப்பாவிற்கும் ரெட்டி சகோதரர்களுக்கும் இடையே அதிகாரச் சண்டை முற்றியபொழுது, பா.ஜ.க.வைச் சேர்ந்த 50-60 சட்டமன்ற உறுப்பினர்கள் ரெட்டி சகோதரர்களோடு ஒட்டிக் கொண்டனர். ரெட்டி சகோதரர்களை இழந்தால், ஆட்சியையே இழக்க நேரிடும் என்பதால்தான், பா.ஜ.க. தலைமையால் ரெட்டி



படிப்பகம்

www.padippakam.com

சகோதரர்களை ஜஸ்வந்த் சிங்கைப் போலக் கழட்டிவிட முடியவில்லை.

கர்நாடகா மாநில மக்கள் குழந்தை குட்டிகளோடு, பசி-பட்டினியோடு வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தபொழுது, பா.ஜ.க.வைச் சேர்ந்த இந்த 50-60 சட்டமன்ற உறுப்பினர்கள், கோவாவிலும், ஹைதராபாத்திலும் உள்ள ஐந்து நட்சத்திர விடுதிகளில் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தனர். முதல்வர் எடியூரப்பாவோ தனது பதவியைக் காத்துக் கொள்ள தில்லிக்குக் காவடி தூக்கிக் கொண்டிருந்தார். பா.ஜ.க. தலைமையோ மாநிலத்தின் வெள்ளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, கட்சிக்குள் நடந்து வந்த அதிகாரச் சண்டையைத் தீர்த்து வைப்பதில்தான் மும்மரமாக இருந்தது. இதிலிருந்து

# ரெட்டி சகோதரர்களின் கிரிமினல் ஜாதகம்

'தேசிய' அரசியலை ஆட்டிப் படைப்பதில் அம்பானி சகோதரர்கள் கில்லாடிகள் என்றால், கர்நாடகா அரசியலுக்கு ரெட்டி சகோதரர்கள் அல்லது பெல்லாரி சகோதரர்கள் என்றழைக்கப்படும் கருணாகர ரெட்டி, ஜனார்தன ரெட்டி, சோமசேகர ரெட்டி ஆகிய மூவரைக் குறிப்பிடலாம். இவர்களின் பணபலத்தையும், அதிரடி அரசியலையும் தமிழக மக்களுக்குப் புரியும்படி ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால், இச்சகோதரர்களை, ''பெல்லாரியின் அழகிரி'' எனக் குறிப்பிடலாம். 'அண்ணன்' அழகிரி கடந்த தேர்தல்களில் 500 ரூபாய் நோட்டுக்களை வீசியெறிந்து ஓட்டுக்களை வாங்கினார் என்றால், ரெட்டி சகோதரர்களோ கர்நாடகா மாநிலச் சட்டமன்றத் தேர்தலின்பொழுது 1,000 ரூபாய் நோட்டுக்களைப் புழக்கத்தில் விட்டு, ஓட்டுக்களை விலை பேசுவதில் 'தேசிய' சாதனையே படைத்தனர்.

இத்துணைக்கும் ரெட்டி சகோதரர்கள் பரம்பரை பணக்காரர்களோ, மிட்டா மிராசுகளோ அல்லர். ஆந்திராவைச் சேர்ந்த சாதாரண போலீசுக்காரனின் வாரிசுகள். இவர்களின் திடீர் வளர்ச்சிக்குத் தனியார்மயமும், தாராளமயமும் எந்தளவிற்கு உதவின என்பது குறித்துத் தனிப் புத்தகமே போடலாம்.



ரெட்டி சகோதரர்களால் ''தாயீ'' என்றழைக்கப்படும் சுஷ்மா சுவராஜுடன் ஜனார்த்தன ரெட்டி (வலது) மற்றும் அவர்களது நம்பகமான தரகன் சிறீராமுலு. (கோப்புப்படம்)

ஆந்திர மாநிலத்தின் எல்லையையொட்டி அமைந்துள்ள கர்நாடகாவின் பெல்லாரி மாவட்டத்திற்குப் பிழைப்பு தேடி வந்த ரெட்டி சகோதரர்கள், ''என்னோபிள் சேவிங்க்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மென்ட் இந்தியா பிரைவேட் லிமிடெட்'' என்ற பெயரில் ஒரு 'பிளேடு' கம்பெனியை (கவுரவமாகச் சொல்ல வேண்டுமென்றால் சீட்டுக் கம்பெனியை)த் தொடங்கினர். அதன் மூலம் மக்களுக்கு நாமம் போட்டு அவர்கள் அடித்த பகற்கொள்ளை மட்டும் 200 கோடி ரூபாய்க்கு மேல் தேறும் எனக் கூறப்படுகிறது. ரெட்டி சகோதரர்கள் இந்த மோசடிக்காக ஒருநாள்கூட கம்பி எண்ணவில்லை. அதே சமயம், வழக்குகளில் இருந்து தப்பிக்க பா.ஜ.க.வில் புகலிடம் தேடிக் கொண்டனர்.

1999-ஆம் ஆண்டு பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுஷ்மா சுவராஜ் பெல்லாரி நாடாளுமன்றத் தொகுதியில் சோனியா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டபொழுது, அவரது தேர்தல் வேலைகள், 'தேவைகள்' அனைத்தையும் ரெட்டி சகோதரர்கள்தான் கவனித்துக் கொண்டனர். அன்று தொடங்கி அரசியலில் மட்டுமின்றி, பொருளாதாரத்திலும் அவர்கள் இந்தியாவின் ''ஜி.டி.பி.''க்கு இணையாக வளரத் தொடங்கினர். தனி ஹெலிகாப்டர்கள், விமானங்கள், ஆடம்பரக் கார்கள் என இவர்களின் பகட்டு வாழ்க்கையைப் பார்த்து விக்கித்துப் போன மக்கள், ''இவர்களின் சொத்து மதிப்பு 100 கோடி ரூபாய் இருக்கலாம்'' என இரகசியமாகப் பேசிக் கொண்டபொழுது, ''எங்களின் சொத்து மதிப்பு 1,000 கோடி ரூபாய்க்கு மேல் தேறும்'' எனச் சட்டமன்றத்திலேயே பகிரங்கமாக அறிவித்துத் தங்களின் பணத் திமிரை வெளிக்காட்டிக் கொண்டனர்.

200 ரூபாய்க்கு விற்று வந்த ஒரு டன் இரும்பு, 2,000 ரூபாயாக அதிகரித்ததற்கு ஏற்ப இவர்களின் கல்லாப்பெட்டியும் நிரம்பி வழிந்தது. பா.ஜ.க. மட்டுமின்றி, காங்கிரசின் எஸ்.எம்.கிருஷ்ணா, ஹெலிகாப்டர் விபத்தில் பலியான ஆந்திராவின் முன்னாள் முதல்வர் ஒய்.எஸ்.ராஜசேகர ரெட்டி ஆகியோரும் ரெட்டி சகோதரர்களின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்துள்ளனர். இரும்புத் தாதுவை வெட்டியெடுக்க அரசு கொடுத்துள்ள வரிச் சலுகைகள் ஒருபுறமிருக்க, இரும்புத் தாதுவைச் சட்டவிரோதமாக வெட்டியெடுத்துக் கடத்துவதன் மூலம்தான் இவர்கள் பெரும் கோடீசுவரர்கள் ஆனார்கள். இந்த வியாபாரத்தின் மூலம் ரெட்டி சகோதரர்களுக்கு ஆண்டொன்றுக்கு 4,000 கோடி ரூபாய் இலாபம் கிடைக்கலாம் எனக் கூறப்படுகிறது.

சந்தன மரத்தை வெட்டிக் கடத்திய வீரப்பனைச் சுட்டுக் கொன்ற அரசு, இந்த இரும்புக் கடத்தலுக்காக இச்சகோதரர்கள் மீது ஒப்புக்காக வழக்கொன்றை உச்சநீதி மன்றத்தில் நடத்தி வருகிறது. இந்த வழக்கில் இவர்களது குற்றம் நிரூபிக்கப்பட்டால், 6 மாத சிறைத் தண்டனையும், 1,000 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுமாம். மாநில அரசினையை கவிழ்க்கும் அளவிற்குப் பண பலமும், குண்டர் பலமும், அரசியல் செல்வாக்கும் கொண்ட இத்திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கு, உச்சநீதி மன்றம் எம்மாத்திரம்?



படிப்பகம்

www.padippakam.com

பா.ஜ.க. எப்படிப்பட்ட கட்சி என்பதை ‘‘இந்துக்கள்’’ புரிந்து கொள்ளலாம்.

ரெட்டி சகோதரர்கள், எடியூரப்பா முதல்வராவதை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தனர். தனது அதிகாரத்திற்கு இடையூறாக இருந்து வரும் ரெட்டி சகோதரர்களைப் போட்டுப் பார்த்துவிடக் காத்திருந்த எடியூரப்பா, வெள்ளச் சேதத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார். வெள்ளச் சேதத்தை ஈடு கட்டுவது என்ற முகாந்திரத்தில், இரும்புத் தாதுவினை ஏற்றிச் செல்லும் ஒவ்வொரு லாரியின் மீதும் கூடுதலாக 1,000 ரூபாய் வரி விதிக்கப்பட்டது; மேலும், ரெட்டி சகோதரர்களுக்கு நெருக்கமாக இருந்த அதிகாரிகள் அனைவரும் பெல்லாரி மாவட்டத்தில் இருந்து ஒரே நேரத்தில் பணி மாற்றம் செய்யப்பட்டனர். தனது அடிமடியிலேயே கைவைக்கத் துணிந்த எடியூரப்பாவிற்கு எதிராக ரெட்டி சகோதரர்கள் ஆரம்பித்த கலகத்திற்கு இரும்புச் சுரங்க முதலாளிகள் அனைவரும் ஒருமனதாக ஆதரவு அளித்தனர்.

இரண்டு கோஷ்டிகளும் வெள்ளச் சேதத்தைத் தமது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள முயன்றன. எடியூரப்பா இரும்புத் தாது மீது கூடுதலாக வரி விதித்தார் என்றால், ரெட்டி சகோதரர்களோ வெள்ளம் பாதித்த பகுதிகளில் 500 கோடி ரூபாய் செலவில் வீடு கட்டித் தரும் திட்டத்தைத் தன்னிச்சையாக அறிவித்தனர். இதன்மூலம், தம்மை மாநில அரசுக்கு மேலானவர்களாகவும், பெல்லாரி மாவட்டம் தமது சொந்த நிலப்பகுதி போலவும் காட்டிட முயன்றனர்.

இத்துணைக்கும் கர்நாடகாவின் பெல்லாரி மாவட்டத்தில் ரெட்டி சகோதரர்களுக்கு இரும்புத் தாதுவை வெட்டியெடுக்கும் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. அவர்களது சுரங்கங்கள் பெல்லாரியையொட்டியுள்ள ஆந்திர மாநிலப் பகுதியில்தான் அமைந்துள்ளன. ஆனால், அவர்களோ ஆந்திர மற்றும் கர்நாடகா மாநில அரசுகளில் தங்களுக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, பெல்லாரியில் இருந்து

> நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது முதலாளிகளுக்காக, முதலாளிகளால் நடத்தப்படும் ஆட்சி என்ற ‘இரகசியத்தை’த் தனியார்மயம் போட்டு உடைத்துவிட்டது.

இரும்புத் தாதுவைக் கடத்துவதை ‘‘அங்கீகரிக்கப்பட்ட’’ தொழில் போலவே நடத்தி வருகின்றனர். தற்பொழுது, பெல்லாரி மாவட்டத்தில் ரெட்டி சகோதரர்களின் ஒப்புதல் இன்றி அதிகாரிகளை இடம் மாற்றவோ, புதிதாக நியமிக்கவோ எடியூரப்பா முயலக் கூடாது என பேரம் பேசப்பட்டிருப்பதால், ரெட்டி சகோதரர்களை பெல்லாரி மாவட்டத்தின் குறுநில மன்னர்களாகவே அங்கீகரித்துவிட்டது, பா.ஜ.க.

எடியூரப்பா-ரெட்டி சகோதரர்களிடேயே நடந்து வரும் இந்த அதிகாரச் சண்டை ஒருபுறம் பா.ஜ.க.வின் உட்கட்சிப் பிரச்சினையாக இருந்தாலும், இன்னொருபுறம், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதாகக் கூறப்படும் அரசாங்கங்களின் மூக்கணாங்கயிறு யார் கையில் இருக்கிறது என்பதை மிகவும் தெள்ளத்தெளிவாக அம்பலப்படுத்திக் காட்டியிருக்கிறது.

முதலாளிகளுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் (அதாவது அரசிற்கும்) முதலாளிகளுக்கும் ஓட்டுக்கட்சிகளுக்கும் இடையே இருந்துவரும் நெருக்கமும் ஒத்துழைப்பும் புதிய விசயம் கிடையாது. டாடா-பிர்லாக்களின் கட்சி என அறியப்பட்ட கட்சிதான் காங்கிரசுக் கட்சி. முன்னாள் மன்னர்கள், லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகளின் கட்சியாக உருவானதுதான் பா.ஜ.க. முதலாளிகள்-ஓட்டுக்கட்சிகள்-அரசு ஆகியவற்றுக்கு இடையே இருந்துவரும் நெருக்கமான பிணைப்பு, நாடாளுமன்றம், அனைவருக்கும் ஓட்டுரிமை ஆகியவற்றின் மூலம் மூடிமறைக்கப்படுகிறது என்பதை கம்யூனிஸ்டுகள் நீண்டநாட்களுக்கு முன்பிருந்தே அம்பலப்படுத்தி வருகின்றனர். தனியார்மயமும், தாராளமயமும் இந்த மூடுதிரை கூடத் தேவையில்லை என அம்மணமாக முதலாளிகளின் ஆட்சியை நம் முன்னே நிறுத்திவிட்டன என்பதுதான் புதிய விசயம்.




கர்நாடக மாநில ஆட்சியை முன்பு சாராய அதிபர்கள் தீர்மானித்தார்கள்



படிப்பகம்

www.padippakam.com

என்றால், இப்பொழுது சுரங்க முதலாளிகள் தீர்மானிக்கிறார்கள். ஆந்திராவில், பாசனக் கால்வாய்களைக் கட்டும் உரிமங்களைப் பெறும் ஒப்பந்தக்காரர்களும்; அரியானாவில் ரியல்-எஸ்டேட் அதிபர்களும்; ஜார்கண்டில் சுரங்க முதலாளிகளும்; மகாராஷ்டிராவில் கரும்பாலை அதிபர்களும்தான் உண்மையில் அரசாங்கத்தை நடத்துகிறார்கள். தமிழகத்தில், தி.மு.க. தலைமையே பெரும் தொழில் குடும்பமாக பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டது. மேற்கு வங்க இடதுசாரிக் கூட்டணி ஆட்சியைக்கூட, அக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட நிரூபன் சக்கரவர்த்தி ஒப்பந்தக்காரர்களின் ஆட்சி என்று அம்பலப்படுத்தி இருக்கிறார்.

கோடீசுவரர்கள்தான் எம்.பி., எம்.எல்.ஏ. தேர்தல்களில் போட்டியிட முடியும் என்பதை கடந்த சில தேர்தல்கள் நமக்கு உணர்த்திவிட்டன. நாடாளுமன்றத்தின் மேலவை என்பது தரகு முதலாளிகளும், அவர்களது நிறுவனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் நுழையும் புறவாசலாகிவிட்டது. அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்கும் நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் தரகு முதலாளிகள், பங்குச் சந்தை சூதாடிகள், வியாபாரிகள் ஆகியோரின் கூடாரமாகிவிட்டதாக ''இந்தியா டுடே'' இதழே அம்பலப்படுத்திப் புலம்பும் அளவிற்கு முதலாளிகளின், புதுப் பணக்காரக் கும்பலின் ஆட்சிதான் நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக நடைபெறும் ஆட்சி எனப் பசப்பிவந்த காலம் மலையேறிவிட்டது. இது, முதலாளிகளுக்காக, முதலாளிகளால் நடத்தப்படும் ஆட்சி என்பதைத் தனியார்மயம் போட்டு உடைத்துவிட்டது. மாறி மாறி எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போட்டாலும், இந்த நிலை மாறிவிடாது. எனவே, உழைக்கும் மக்கள் தங்களுக்கான அரசை எப்படி அமைப்பது என்பதைக் கண்டுணர்ந்து, செயல்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது.

• குப்பன்

## சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:

# நாட்டை வளைத்திருக்கும் ஒட்டுண்ணிகள்!

சில ஆண்டுகளுக்கு முன், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியபோது, அவற்றின் நோக்கங்களாக, ''தொழிற்துறை வளர்ச்சி, ஏற்றுமதிப் பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு'' ஆகியவற்றை ஆட்சியாளர்கள் முன்வைத்தார்கள். சி.பொ.ம.வில் முதலீடு செய்யும் நிறுவனங்களால், நாட்டிற்குப் பெரிய அளவில் பலன்கள் ஏற்படும் எனச் சொல்லி, அந்நிறுவனங்களுக்கு அரசு பல்வேறு வரிச்சலுகைகளை வாரி வழங்கியது. வரிச்சலுகைகளால் கொழுத்த சி.பொ.ம.க்களால் தொழிற்துறையில் பெரிய அளவில் மாற்றங்கள் ஏதும் நடந்துள்ளனவா எனப் பார்த்தால், ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. அவை உற்பத்தி செய்த பொருட்களில் பெரும்பான்மை உள்நாட்டில்தான் விற்கப்பட்டுள்ளனவே தவிர, ஏற்றுமதி அதிகரிக்கவில்லை. வேலைவாய்ப்போ, அவர்கள் காட்டிய கணக்கை விட மிகவும் குறைந்த அளவில்தான் உருவாகியிருக்கிறது.

2006-ஆம் ஆண்டு சி.பொ.ம. சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து, நம் நாட்டில் உருவாக்கப்பட்ட சி.பொ.மக்களின் எண்ணிக்கை 315-ஐத் தொட்டுவிட்டது. மேலும், கூடுதலாக 253 மண்டலங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. சி.பொ.ம.க்களின் தற்போதைய நிலைமை குறித்து அறிய, சென்னைக்கு அருகில் உள்ள திருப்பெரும்புதூரில் அமைக்கப்பட்டுள்ள நோக்கியா சி.பொ.ம.வை உதாரணமாகப் பார்க்கலாம். கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 2,225.47 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்பட்டுவரும் இம்மண்டலம், 10,385 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்து, 14,859 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பிற சி.பொ.ம.க்களுக்கெல்லாம் சிறந்த உதாரணமாக விளங்குவதாக, இந்தியத் தொழில்-வர்த்தகத் துறை அமைச்சகச் செய்திக் குறிப்பு குறிப்பிடுகிறது.

தமிழகத்தின் நோக்கியா சி.பொ.ம.வினால் கிடைத்த 'நன்மை'களையும் 'வளர்ச்சி'யையும், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தற்போது வெளிக்கொண்டு வந்துள்ளன. 2005-ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கும்

நோக்கியா, மக்களை இணைக்கவில்லை; தொழிலாளர்களை வேலையை விட்டுத் துரத்துகிறது என அம்பலப்படுத்தும் கேலிச்சித்திரம்.






படிப்பகம்

www.padippakam.com

நோக்கியா நிறுவனத்திற்கும் சி.பொ.ம. அமைப்பதற்கானதொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. நோக்கியாவைத் தங்கள் பக்கம் இழுப்பதற்கான போட்டியில் தமிழ்நாடு, மராட்டியம், ஆந்திரம், அரியானா மாநில அரசுகள் போட்டியிட்டன. இறுதியில், தமிழ்நாடு அரசு அறிவித்த சிறப்புச் சலுகைகளின் காரணமான அந்நிறுவனம் தமிழகத்தைத் தேர்வு செய்தது. சி.பொ.ம. சட்டம் வழங்கிய எல்லா சலுகைகளுக்கும் மேலாக, தமிழக அரசின் சிறப்பு வரிச் சலுகைகளும், தொழிலாளர்களைக் கட்டுப்படுத்துதல், மலிவு விலையில் நிலம் போன்ற இதர சலுகைகளும் அந்த ஒப்பந்தத்தின் மூலம் நோக்கியாவிற்குத் தரப்பட்டன.

சி.பொ.ம.வின் உற்பத்திப் பொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்கும் போது, அவற்றுக்கு மதிப்புக் கூட்டு வரி, விற்பனை வரி ஆகியவற்றைச் செலுத்த வேண்டும். நோக்கியா நிறுவனம், இவ்வாறு செலுத்தும் வரித்தொகையை, தமிழக அரசு திரும்பக் கொடுத்து விடுமென புரிந்துணர்வு ஒப்பந்தம் கூறுகிறது. சி.பொ.ம.க்களின் நோக்கம் ஏற்றுமதியை மையமாகக் கொண்டிருக்கும் போது, தமிழக அரசு நோக்கியாவிற்கு அளித்திருக்கும் முக்கியமான வரிச்சலுகையான மதிப்புக்கூட்டு வரி விலக்கு என்பது கவனிக்க வேண்டிய விசயமாகும். மதிப்புக் கூட்டுவரி என்பது உள்நாட்டு விற்பனைக்கு விதிக்கப்படும் வரியாகும். ஏற்றுமதிக்காகத் தொடங்கப்படும் ஒரு சி.பொ.ம.விற்கு, சட்டவிரோதமாக உள்நாட்டு விற்பனைக்கும் சலுகை கொடுத்தது, தி.மு.க. அரசு.




2300 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்து, ஆலையை மூடி வயிற்றிலடித்த நோக்கியா நிறுவனத்துக்கு எதிராக, ஜனவரி 2008-இல் ஜெர்மனியின் போர்ச்சும் நகரில் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

இவ்வாறு அரசு, வரிகளைத் திரும்பத் தருவது இரு வகையில் நடைபெறும். தமிழகத்தில் நோக்கியா நிறுவனம் தனது செல்பேசிகளை விற்பனை செய்தால், அது கட்டும் மதிப்புக் கூட்டு வரியை அரசு திரும்பச் செலுத்தும். அதேபோல, அந்நிறுவனம் தமிழகம் தவிர பிற மாநிலங்களில் செல்பேசி விற்பனை செய்தால், அது செலுத்தும் விற்பனை வரியையும் தமிழக அரசு திரும்பச் செலுத்தும்.

இந்தியாவில் செல்பேசியின் விலையில் 4% மதிப்புக்கூட்டு வரியாகவும் 3% விற்பனை வரியாகவும் விதிக்கப்படுகிறது. இந்தியாவில் செல்பேசி விற்பனையில் முதலிடத்தில் உள்ள நோக்கியாவின் மொத்த விற்பனை 2007-08-ஆம் ஆண்டில் மட்டும் 3,578 கோடி ரூபாய். அந்த ஆண்டு மட்டும், தமிழக அரசு நோக்கியாவுக்கு அளித்த மதிப்புக்கூட்டு வரி விலக்கும், பிற மாநிலங்களில் நோக்கியா கட்டிய விற்பனை வரியை திரும்பச் செலுத்த வேண்டியதொகையும் சேர்த்து மொத்தம் 107 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கியது.

மூன்று ஆண்டுகளில் அவர்கள் எவ்வளவு முதலீடு செய்கிறார்களோ, அந்த அளவிற்கு அதிகபட்சமாக வரியைத் திரும்ப அரசு திருப்பித் தரலாம் என ஒப்பந்தம் கூறுகிறது. 2005-இல் நோக்கியா 675 கோடி ரூபாய் முதலீடு போடப்போவதாக அறிவித்தது. இதில் 300 கோடி ரூபாய் வரிச்சலுகைக்கு கணக்கிலெடுத்துக் கொள்ளும் வகையில் முதலீடு செய்யப்பட்டது. 2008-இல் 338 கோடி ரூபாய் முதலிடப்பட்டது. ஆக, மூன்று ஆண்டுகளில் மொத்தம் 638 கோடி ரூபாய் வரை தமிழக அரசு நோக்கியாவுக்கு வரிச்சலுகை தரலாம். தரவுகளை வைத்துப் பார்க்கும்போது, இந்தத் தொகை அளவிற்கு அவர்களுக்கு வரிச்சலுகை அளிக்கப்பட்டிருக்கலாம் என்று கூற முடியும். இவ்வாறு நோக்கியா நிறுவனம் செய்த மொத்த முதலீடுகளையும் அவர்களிடமே திரும்ப ஒப்படைத்து, அந்நிறுவனம் 'வெற்றிகரமாக' இயங்க வைக்கப்படுகிறது.

வரிச்சலுகைக்கு அடுத்தபடியாக அந்நிறுவனம் பெற்ற முக்கியமான சலுகை, குறைந்த விலையில் நிலம். திருப்பெரும்புதூரில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில், நோக்கியா சி.பொ.ம.விற்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டன. அந்நிலங்கள் 1997-ஆம் ஆண்டு சிறப்புச் சட்டம் ஒன்றின் மூலம் சிப்காட் நிர்வாகத்தால் விலைக்கு வாங்கப்பட்டவை.

முதல் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி, நோக்கியா நிறுவனம் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெற ஏக்கர் ஒன்றுக்கு 8 லட்சம் தரவேண்டும் என அறிவிக்கப்பட்டது. இது இரண்டாவது ஒப்பந்தத்தில் ஏக்கருக்கு 4.5 லட்சம் எனக் குறைக்கப்பட்டது. ஆக மொத்தம் 210.87 ஏக்கர் நிலத்திற்கு அவர்கள் தர வேண்டிய தொகை வெறும் 9 கோடியே 48 லட்சத்து 91 ஆயிரத்து ஐநூறு ருபாய் மட்டுமே. அதேசமயம் மத்திய அரசின் ஆணையக் கணக்குப்படி, நிலங்களைக் கையகப்படுத்த அரசு கொடுத்த தொகையோ மிகவும் அதிகம். அதாவது ஏக்கருக்கு 4 முதல் 14 லட்சம் வரை தொகை நிர்ணயிக்கப்பட்டது. இதுவும் போதாதென்று, நீதிமன்றம் சென்ற நில உரிமையாளர்களுக்கு மேலும் 30% அதிகமாகக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் சிப்காட் நிர்வாகத்திற்கு, அதாவது தமிழக அரசுக்கு 7.4 கோடி ருபாய் நட்டம் ஏற்பட்டது.

இவ்வாறு குறைந்த விலையில் நிலம் கொடுத்தது மட்டுமல்லாமல், இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்



படிப்பகம்

www.padippakam.com

தில், நிலம் வாங்குவதற்கான பத்திரப் பதிவுக் கட்டணம் தள்ளுபடி செய்யப் பட்டது. முதல் புரிந்துணர்வு ஒப்பந் தத்தில், மொத்த மதிப்பில் 4 சதவீதத் தைப் பத்திரப் பதிவுக்கெனத் தர வேண்டும் என இருந்தது. அதனைத் தள்ளுபடிசெய்ததன் மூலம் நோக் கியா நிறுவனத்திற்கு 38 லட்சம் ரூபாய் சலுகையாக அளிக்கப்பட்டது.

இந்த நிலத்துக்கு நோக்கியா தர வேண்டிய குத்தகைத் தொகை ஏக்க ருக்கு ஆண்டு ஒன்றுக்கு, ஒரே ஒரு ரூபாய் மட்டுமே. அடுத்த 99 ஆண்டு களுக்கான குத்தகைத் தொகையை அந் நிறுவனம் முன்பணமாகத் தந்துவிட் டது. இவ்வாறு குத்தகைக்கு 210 ஏக்கர் நிலத்தை வாங்கியுள்ள அந்நிறுவனம், அந்த நிலத்தை யாருக்கு வேண்டுமா னாலும் எவ்வளவு தொகைக்கு வேண்டுமானாலும் உள்வாட கைக்கோ, மறு குத்தகைக்கோ விட லாம். அந்நிலங்களில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும் முன்பே, அதற்குத் தேவையான சாலைகள், மின்சாரம், தண்ணீர் போன்றவை எல் லாம், தமிழக மக்களின் வரிப்பணத்தி லிருந்தே செய்து தரப்பட்டன.

மக்களின் வரிப் பணத்தில் முத லீடு, மலிவு விலையில் நிலம், அடிப் படைக் கட்டுமானங்கள் அனைத்தும் இலவசம் என சலுகைக்கு மேல் சலு கையாக வாங்கிக் குவித்த நோக்கியா உருவாக்கிய வேலைவாய்ப்பு, வெறும் நான்காயிரத்து ஐநூறு மட்டு மே. 14 ஆயிரத்துக்கும் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கப்போவதாக சவடால் அடித்த அந்நிறுவனம், உண்மையில் அதில் பாதியளவிற்குக் கூட வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை என்பது தான் உண்மை. கடந்த 2008-ஆம் ஆண்டு ஜூலை மாதத் தில், தொழிற்சாலைகளுக்கான ஆணையர் நடத்திய சோதனையின் போது 4,548 பேர் மட்டுமே அங்கு வேலைசெய்வதாகத் தெரிய வந்துள்ளது. இதில் 70% பேர் 19 முதல் 22 வயதுக்குட்பட்ட பெண்கள். இவர் களுக்கு ஆண் தொழிலாளர்களுக்கு தரப்படும் சம்பளத் தில் முக்கால் பங்கை மட்டுமே கொடுத்து ஏமாற்றி வருகின்றனர். மிகக் குறைந்த கூலி தந்து சுரண்டப்படும் இவர்களில் பெரும்பலோர் ஒப்பந்தத் தொழிலாளர் களாவர்.

நோக்கியாவின் மொத்த வேலைவாய்ப்புகளில் 2893 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாக, உற்பத்தி சாராத



> நோக்கியா 2005-2008 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் போட்ட முதலீடு 338 கோடி ரூபாய்தான். அதேபொழுதில் அந்த மூன்றாண்டுகளில் நோக்கியா தமிழக அரசிடமிருந்து வாரிக் கொண்ட வரிச் சலுகையோ 638 கோடி ரூபாய்க்கும் மேல்.

துறைகளில் வேலை செய்து வருகின் றனர். சமையல்காரர்கள், காவலர்கள், ஓட்டுநர்கள் என அடிமட்டத் தொழி லாளர்களாக இருக்கும் இவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு என்பதே கிடை யாது. கடுமையாக வேலை வாங்கப் பட்டாலும், காரணமேயின்றி திடீ ரென்று வேலைநீக்கம் செய்யப்பட்டா லும் ஏன் என்று கேட்க இவர்களால் முடியாது.

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதைத் தடை செய்யும் நோக் கில், ஆந்திரா, மகாராஷ்டிரா, கருநாட கம் போன்ற மாநில அரசுகள் சி.பொ.ம.க்களை அத்தியாவசியப் பொருளுற்பத்தி நிலையங்களாக அறி வித்து விட்டன. ஆனால், தமிழகத்தில் இதனைப் பகிரங்கமாக அறிவிக்கா மல், கள்ளத்தனமாக 2005 ஏப்ரலில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந் தத்தில் ஒரு அம்சமாகவே அதனைச் சேர்த்துள்ளனர். ‘‘சி.பொ.ம.வில் தொழிலாளர்கள் பிரச்சனை செய்யா மல் கட்டுப்படுத்த, அதனை அரசு அத் தியாவசிய சேவையாக அறிவிக்கும்’’ என அவ்வொப்பந்தத்தில் குறிப்பிட் டுள்ளனர்.

தொழிற்துறை வளர்ச்சி, ஏற்று மதிப் பெருக்கம், வேலைவாய்ப்பு அதிகரிப்பு என பல உறுதிமொழிக ளோடு நாடெங்கும் உருவாக்கப்பட்ட சி.பொ.ம.க்களின் நிலைமைக்கு, நோக்கியா சி.பொ.ம. ஒரு வகை மாதிரி. கிட்டத்தட்ட 90 ஆயிரம் கோடி வரிச் சலுகைகளை அள்ளித் தந்து வெறும் 3 இலட்சம் வேலைவாய்ப்புகளை மட்டுமே உருவாக்கும் இத்திட் டத்தை நிராகரித்து, அந்தப் பெருந்தொகையை சிறு தொழில் வளர்ச்சிக்கென ஒதுக்கினால் பல மடங்கு வேலைவாய்ப்பை உருவாக்கி, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க முடியும். ஆனால் சி.பொ.ம.க்களோ, நம் மக் களின் வரிப்பணத்தில் மஞ்சள் குளித்துக் கொண்டு, அவர்களே உறுதியளித்திருந்த வேலைவாய்ப்பில் பாதி யைக் கூட வழங்காமலும், எவ்வித தொழிலாளர் உரி மைகளையும் வழங்காமலும் கொத்தடிமை சமஸ்தானங் களாகத்தான் உருவாகியிருக்கின்றன. சிறப்புப் பொருளா தார மண்டலங்கள், வளர்ச்சிக்கான முன்னுதாரணம் அல்ல; உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் முதலாளித் துவ சூறையாடலுக்கான அடையாளம்தான் என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்?

● மணி



படிப்பகம்

www.padippakam.com

# தேவர் ஜெயந்தியும் 'முற்போக்கு' நரிகளும்

**தேவர் சிலைக்கு மாலை போடும் 'முற்போக்கு' பேர்வழிகளுக்கு, சாதி ஒழிப்புப் பற்றி பேசும் அருகதை கிடையாது.**

தமிழ்த் தேசியம், தமிழீழம், பெரியார் கொள்கை பற்றி எல்லாம் மேடைதோறும் முழங்குபவர்களும் சரி, தமிழகத்தில் 'முற்போக்கு சக்திகள்' எனத் தம்மைக் கருதிக் கொள்வோரும் சரி, உள்ளூர சாதிவெறி புழுத்து நாறுபவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதிர்ச்சியூட்டும் இந்த உண்மைகள், அண்மைக்காலத்தில் ஒவ்வொன்றாக அம்பலமாகத் தொடங்கியுள்ளன.

மேடை தோறும் ஈழம், பிரபாகரன், தமிழ்த் தேசியம் பற்றி உணர்ச்சி பொங்கப் பேசியும், தன்னைப் பெரியாரின் பேரன் என்று முழங்கியும் வந்த திரைப்பட இயக்குநர் சீமான், பிரபாகரன் படம் பொறித்த சட்டையணிந்து வந்து தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டு தன் சாதி வெறியை வெளிப்படுத்தியுள்ளார். சீமானின் தேவர் சாதிப் பற்றை பெரியார் தி.க. ஆதரவு இணையதளம் மட்டும் விமர்சித்துள்ளது. இதுவரை 'தம்பி' சீமானை சீராட்டிவந்த மற்ற ஈழ ஆதரவு சக்திகளோ, இப்போது அவரைக் கண்டுகொள்ளாது கைகழுவி விட்டுவிட்டன. இவர், ஏற்கெனவே தனது ''தம்பி'' திரைப்படத்தில் தேவர் புகைப்படத்தை இடம் பெறச் செய்தபோதே விமர்சிக்கப்பட்டார். அதனைத் தவறென ஒத்துக் கொண்ட சீமான், இப்போது தேவர் ஜெயந்தியில் கலந்து கொண்டதை, ''இம்மானுவேல் சேகரனுக்கும் மாலை போட்டதை''க் குறிப்பிட்டு நியாயப்படுத்தியுள்ளார். அதாவது, சாதி ஒடுக்குமுறையாளருக்கும் ஒடுக்கப்பட்டவருக்கும் ஒரே மரியாதை. இதுதான், இந்தப் 'பெரியாரின் பேரனது' சாதி ஒழிப்பு சமத்துவம்!



தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொண்டு தனது சாதிப்பற்றை வெளிப்படுத்திய 'பெரியாரின் பேரன்' இயக்குநர் சீமான்.

இதே பித்தலாட்டத்தைத்தான் புரட்சி பேசும் சி.பி.எம். கட்சியும் செய்திருக்கிறது. சி.பி.எம்-மின் 'தீண்டாமை ஒழிப்பு முன்னணி' தாழ்த்தப்பட்டோர் உரிமைக்காக உத்தப்புரத்தில் போராடுகிறது. அதே கட்சியின் பொதுச் செயலர் என்.வரதராசன், அறுவை சிகிச்சை முடித்து கறுப்புக் கண்ணாடி அணிந்தவாறே, சாதி ஒடுக்குமுறையின் சின்னமான தேவர் சிலைக்கு ஓடோடிப் போய் மாலை போட்டு மரியாதை செய்தார்.

மேடைக்கு மார்க்சியம், ஓட்டுக்கு சாதி: சாதிவெறியர்களின் குலதெய்வமான தேவர் சிலைக்கு மாலை போட்டு மரியாதை செய்யும் சி.பி.எம். கட்சியின் செயலாளர் வரதராசன்.



சென்ற ஆண்டு தேவர் ஜெயந்தியை ஒட்டி, சாதிவெறியாட்டம் ஆடிய சட்டக் கல்லூரியின் ஆதிக்க சாதி மாணவர்கள், தாழ்த்தப்பட்டோரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டதை, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், ''ஒரு மாணவனைப் போய் இந்த அடி அடித்தார்களே'' என்று சுயசாதிவெறியோடு ஒரு வருடமாக பேசியும் எழுதியும் வந்த வலது கம்யூனிஸ்டு கட்சியின் தா.பாண்டியன், தன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான லிங்கத்தை பசும்பொன்னுக்கே அனுப்பிவைத்து தேவருக்கு மரியாதை செய்தார். முதலாளிகளின் சீட்டாட்டக் கிளப்பான ''லயன்ஸ் கிளப்''பில் முத்துராமலிங்கம் என்ற சொந்த சாதிக்காரர் இருப்பதால், அந்த கிளப்பின் விழாவை தா.பாண்டியன் வாழ்த்தும் விளம்பரம் ''ஜனசக்தி''யில் வெளிவந்துள்ளது. தேவர் சாதிவெறித்



படிப்பகம்

www.padippakam.com

தலைவர்களான முத்துராமலிங்கத் தேவர், மூக்கையாத் தேவர் போன்றோருக்கு அவ்வப்போது சிறப்புக் கட்டுரைகளை வெளியிடும் ஜனசக்தியில் பணிபுரியும் ஜீவ பாரதியோ, டஜன் கணக்கில் தேவர் பெருமை பேசும் நூல்களையும் வெளியிடுபவர். ஜனசக்தி ஆசிரியர் தா.பாண்டியனோ, முக்குலத்தோர் சாதிகளில் ஒன்றான அகமுடையார் சங்க கல்வி அறக்கட்டளை விழாவில் கலந்துகொண்டு ‘‘அதில் என்ன தவறு?’’ என நியாயப் படுத்துபவர்.

‘‘முதுகுளத்தூர் சாதிக் கலவரத்தை நிறுத்தவேண்டுமானால், முத்துராமலிங்கத்தைப் பிடித்துச் சிறைக்குள் தள்ள வேண்டும்’’ எனக் கோரியவர் பெரியார். அவர் ஆரம்பித்த தி.க.வின் ‘‘விடுதலை’’ பத்திரிக்கையோ, வழக்கம்போல இந்த ஆண்டும் ‘‘தேவர் ஜெயந்தி’’ விழாவிற்கு விளம்பரம் வாங்கிப் பிரசுரித்துக் கொண்டது. சமூகநீதி, சாதி ஒழிப்பு, சமத்துவம் என்றெல்லாம் வாய்ப்பந்தல் போடும் வீரமணி கும்பலின் பித்தலாட்டம், தேவர் ஜெயந்தியோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. திராவிடர் கழகத்தின் தென்மாவட்டப் பிரச்சாரக் குழுத் தலைவராக இருக்கும் தே.எடிசன் ராஜா, நாடார் சங்கத்திலும் செயல்படுகிறார். மும்பையில் நாடார் சங்கம் நடத்தும் காமராசர் நினைவுப் பள்ளி விழாவில் எடிசன் ராஜாவுக்கு ‘நாடார்’ வால் முளைத்து, ‘‘எடிசன் ராஜா நாடார்’’ ஆக மாறினார். பாரம்பரியமான திராவிட இயக்கக் குடும்பத்தைச் சேர்ந்தவரும், தி.க.வின் தகவல் தொடர்பு செயலாளருமான வழக்கறிஞர் அருள்மொழியின் தாயார் சரசுவதி சென்ற ஆண்டு மறைந்தபோது, ‘‘இந்து’’ நாளேட்டில் தந்திருந்த அஞ்சலி விளம்பரத்திலும் தனது ‘உடையார்’ சாதி அடையாளத்தைத் தெளிவாகவே காட்டியிருந்தார்.

தேவர் சாதியைச் சேர்ந்த திரைப்பட பிரபலங்கள், தங்கள் சாதி விழாக்களில் அண்மைக்காலமாகக் கலந்து கொண்டு சாதி வளர்க்கின்றனர். இவர்களில் செந்தில், மனோரமா, விவேக் வரிசையில் இப்போது தி.மு.க.வைச் சேர்ந்த திரைப்படப் பாடலாசிரியர் வைரமுத்துவும் இணைந்துவிட்டார். நகைச்சுவை நடிகர் கருணாஸ், தேவரைப் புகழ்ந்து ‘‘முக்குலத்தின் முகவரி’’ எனும் பாடல்தொகுப்பை வெளியிட்டிருக்கிறார். இதில் முகவரியை எழுதுவதற்கு வைரமுத்து ‘‘திருப்பாச்சி அறுவாளை’’த் தூக்கிக் கொண்டு குதித்திருக்கிறார்.

‘‘ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்’’ என்ற கொள்கை முழக்கத்தைக் கொண்டிருக்கும் வே.ஆனைமுத்துவின் மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியோ, ‘வன்னியர்களே ஒன்றுசேருங்கள்’ என்று சொல்லவில்லையே தவிர, வன்னியகுல சத்திரிய ‘சமூக நீதி’யைத் தாண்டி வரவே இல்லை.

‘அம்பேத்கரின் சாதி ஒழிப்பு செயல்திட்டங்களை ஆழமாகப் புரிந்து கொள்ள’ச் சொல்லி சி.பி.எம். கட்சிக்கு ‘பாடம் நடத்தும்’ தலித் முரசில், ‘‘இந்து ஆதி திராவிட மணமகனுக்கு அதே உள்பிரிவில் மணமகள் தேவை’’ என விளம்பரம் வருகிறது. சாதி காக்கும் இச்செயல் ஒவ்வோர் இதழிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.




‘முற்போக்கு’க் கவிஞர் வைரமுத்துவின் பாடல்களைக் கொண்ட, நடிகர் கருணாஸின் ‘‘முக்குலத்தின் முகவரி’’ பாடல் ஒலிப்பேழை வெளியீட்டு விழா: சாதியம் காத்து, சாதியப் பெருமையில் பூரிக்கும் ஆதிக்க சாதியினர்.

‘‘சாதியை மறந்து தமிழர்களாக நாம் ஒன்றுபட வேண்டும்’’ என கருணாநிதி பேசுகிறார். ஆனால், அவரின் மகள் கனிமொழியோ, திருப்பூர்-மல்லம் பாளையம் நாடார் சங்கக் கல்வி நிறுவன விழாவிற்கு நாடார் சாதி தி.மு.க. அரசியல்வாதிகளான சற்குணபாண்டியன், கீதாஜீவன், பூங்கோதை போன்றவர்களுடன் கலந்து கொண்டு ‘நாடார்களாக ஒன்றுபடுகிறார்’.

பெரியாரின் கொள்கைகளைத் தங்கள் கொள்கையாகக் கருதுவோரும், தமிழ்த்தேசியத்தை வென்றெடுக்கக் களம் கண்டிருப்பவர்களும், சாதி ஒழிப்பிற்குப் பிறகுதான் சோசலிசம் எனத் தலித்தியம் பேசுபவர்களும், தாங்கள் கொண்டிருக்கும் இலட்சியத்திற்குக் கூட விசுவாசமாக இல்லாமல் சாதி உணர்வாளர்களாகவோ, வெறியர்களாகவோதான் இருக்கிறார்கள். தங்களின் தோலைக் கீறி சாதி இரத்தம் ஓடுவதை அவர்களாகவே ஒவ்வோர் நிகழ்விலும் தெளிவாக வெளிச்சம் போட்டுக் காட்டியும் விடுகின்றனர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சமூகத்தை சாதி எனும் நுகத்தடி அழுத்திக் கொண்டிருக்கிறது. மனித நீதிக்கு எதிரான சாதி ஆதிக்கவெறியை அழிப்பதற்கு, மாபெரும் சமூகப் புரட்சியே தேவைப்படுகிறது. அப்புரட்சி, சாதி வெறியர்களுக்கு எதிரானது மட்டுமல்ல, முற்போக்கு வேடம் போடும் இத்தகைய களைகளுக்கும் எதிரானதுதான். இத்தகைய சுயசாதி மோகம் கொண்டோர்களையும், சாதியத்தைப் பாதுகாத்துவரும் ஓட்டுப் பொறுக்கிகளையும் களைந்தெறியாமல் சாதி வெறிக்கெதிரான போராட்டத்தில் முன்னேறிச் செல்லவே முடியாது.

● நன்மாறன்



படிப்பகம்

www.padippakam.com

# மாஃபியா கும்பலின் பிடியில் திணறும் 'செஞ்சீனம்'!

**செஞ்சீனத்தை, மஞ்சள் சீனமாக மாற்றியதுதான் போலி கம்யூனிஸ்டு கும்பலின் சாதனை.**

**சா**ங்குயிங் என்ற நகரம், சீனாவின் மேற்கேயுள்ள சிச்சுவான் மாநிலத்தின் வளர்ந்துவரும் பெரு நகரங்களில் ஒன்றாகும். இந்நகரத்தைச் சேர்ந்த லீ குயாங் என்பவர், சீன 'கம்யூனிஸ்ட்' கட்சியின் செல்வாக்குமிக்க அதிகாரி. அவர் ஒரு பெரும் தொழிலதிபர்; கோடீசுவரர். வீட்டுமனைத் தொழிலிலும் நகரின் வாடகைக் கார் போக்குவரத்திலும் அவர்தான் ஏகபோக அதிபர். இது தவிர, ஏராளமான சூதாட்ட-சாராய-களிவெறியாட்ட-விபச்சார விடுதிகளையும் போதைமருந்து வியாபாரத்தையும் சட்டவிரோதமாக அவர் நடத்தி வந்தார். நவீன ஆயுதங்களைக் கொண்ட குண்டர் படையையும் அவர் வைத்திருந்தார். எனவே, சாங்குயிங் நகரில் அவர் வைத்ததுதான் சட்டம். அவர்தான் இந்நகரின் ''ஞானத் தந்தை''!

நான்காண்டுகளுக்கு முன்பு, இந்நகரைச் சேர்ந்த ஹூவாங் கோபி என்ற 47 வயதான பெண்மணி, தன்னுடைய வீட்டுமனையை இவருக்குத் தர மறுத்தார். விளைவு? அவரின் கண் முன்பாகவே அவரது கணவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அவரது வீடு நாசமாக்கப்பட்டது. குற்றுயிராக அவர் தெருவில் வீசியெறிப்பட்டார். இக்கொடுஞ்செயலைப் பற்றி அவர் போலீசில் புகார் தெரிவித்தார். நீதிமன்றத்தில் முறையிட்டார். ஆனால், லீ-யின் வானளாவிய அதிகாரத்தை எதிர்த்து அதிகார வர்க்கமோ, நீதித்துறையோ, போலீசோ எதுவும் செய்ய மறுத்தன. ஹூவாங் கோபியின் துயரமும் லீ-யின் கொட்டமும் ஏதோ விதிவிலக்கான சம்பவம் அல்ல. சீனா முழுவதும் நடந்துவரும் கம்யூனிசப் போர்வையணிந்த தனியார் முதலாளிகளின் அட்டூழியங்களுக்கும் பயங்கரத்துக்கும் ஒரு உதாரணம்தான் இந்தச் சம்பவம்.

சாங்குயிங் நகர 'கம்யூனிஸ்ட்' கட்சியின் புதிய செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள போ ஷிலாய் என்பவர், கட்சித் தலைமையின் ஆதரவுடன் லீ கும்பலுக்கு எதிராக அதிரடி நடவடிக்கை எடுத்து கடந்த ஜூலை 21-ஆம் தேதியன்று நூற்றுக்கணக்கான அரசு அதிகாரிகள், போலீசு அதிகாரிகள், நீதிபதிகள்- என அனைவரையும் கைது செய்ய உத்தரவிட்டார். லீ உள்ளிட்டு, பல மாஃபியா குண்டர் படைகளுக்குப் புரவலனாக இருந்த அந்நகரத்தின் போலீசு கமிசனர், விபச்சார-சூதாட்ட விடுதிகளையும் போதை மருந்து வியாபாரத்தையும் நடத்தி வந்த இந்நகரின் ''ஞானத் தாய்'' ஷி காய்பிங் - என 31 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, 1500 அரசு அதிகாரிகள், 250 போலீசு அதிகாரிகள், மூன்று கோடீசுவரர்கள், 70 குண்டர் படைத் தலைவர்கள் எனப் பலர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக இக்கும்பல் நடத்திவந்த ஆயுத தொழிற்சாலை அம்பலப்பட்டு, ஏராளமான ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. உலக மகா கோடீசுவரர்கள் பயன்படுத்தும் ஃபிரார், லம்போர்கினிஸ், பென்ட்லேஸ் முதலான கார்களுடன்

சீன முதலாளித்துவத்தின் மகிமை: கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும் முதலாளித்துவ பயங்கரவாத கிரிமினல் மாஃபியாக்கள் (இடது); விசாரணைக்குப் பின் மரண தண்டனை விதிக்கப்பட்டு, மக்கள் முன் நிறுத்தப்பட்ட முதலாளித்துவ மாஃபியா குண்டர்படைத் தலைவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

''இது 10 சதவீத கமிசன் வாங்கும் ஊழல் பெருச்சாளிகளின் ஆட்சி. இரகசிய உலகப் பேர்வழிகள் அரசியல் பலத்தோடு அரசு எந்திரத்தையே தமது காலடியில் கொண்டுவந்து விட்டனர்'' என்று 'சோசலிச' சீனாவைப் பற்றி விவரிக்கிறார் பூ யோங்ஜியான் என்ற பேராசிரியர்.

உல்லாசமாகத் திரிந்த இக்கும்பலின் ஆடம்பர வெளிநாட்டு சொகுசு கார்கள், 65 -க்கும் மேல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பலருக்கு ஆயுள் தண்டனையும், மாஃபியா குண்டர் படைத் தலைவர்களுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. கிரிமினல் குற்றக் கும்பல்களுக்கு எதிரான இந்நடவடிக்கை தொடங்கியதும், வேறு சில நகரங்களிலும் இதேபோன்று கைதுகள் நடந்து, அதில் சிலருக்கு மரண தண்டனையும் ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இக்கிரிமினல் கும்பல் மீதான வழக்கு விசாரணைக்கு வந்தபோது, சாட்சியமளிக்க வந்த ஹூவாங் கோபியைப் போலவே 300-க்கும் மேற்பட்டோர் தங்களுக்கும் இக்கிரிமினல் கும்பலால் ஏற்பட்ட கொடுமைகளை வாய்விட்டு அழுது சாட்சியமளித்துள்ளனர். ''இந்தக் குண்டர்கள் பட்டப்பகலில் பலரை வெட்டிக் கொன்றனர். பலரைப் படுகாயப்படுத்தினர். போலீசில் புகார் செய்தால் மீண்டும் தாக்கி எச்சரித்துப் பயபீதியை உருவாக்கினர். சீனாவின் குயிங் வம்ச கொடுங்கோலாட்சியில் கூட இத்தகைய கேள்விமுறையற்ற அட்டூழியங்கள் நடந்ததில்லை'' என்று வேதனையுடன் புலம்பினார், நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வந்த ஒரு சீனத் தொழிலாளி.

''இது 10 சதவீத கமிசன் வாங்கும் ஊழல் பெருச்சாளிகளின் ஆட்சி. இரகசிய உலகப் பேர்வழிகள் அரசியல் பலத்தோடு அரசு எந்திரத்தையே தமது காலடியில் கொண்டுவந்து விட்டனர். இலஞ்ச ஊழலே இன்று 'கம்யூனிஸ்ட்' கட்சியை அச்சுறுத்தும் பெரிய நோயாக மாறிவிட்டது'' என்று சீழ்பிடித்து நாறும் சீனாவைப் பற்றி விவரிக்கிறார் பூ யோங்ஜியான் என்ற பேராசிரியர். உண்மைதான்! கடந்த செப்டம்பரில் சீன 'கம்யூனிஸ்ட்' கட்சியின் விரிவாக்கப்பட்ட பிளீனத்தில், கட்சியில் புரையோடிப் போய்விட்ட இலஞ்ச ஊழலுக்கு எதிராகப் போராடுமாறு கட்சித் தலைமையே அறைகூவல் விடுக்குமளவுக்கு, அக்கட்சியும் அதன் முதலாளித்துவ ஆட்சியும் நாடெங்கும் நாறிப் போயுள்ளது.

உலகமயமாக்கத்தின் கீழ் எந்தளவுக்கு அரசு ஆதரவோடு தனியார் முதலாளித்துவம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறதோ, அந்தளவுக்கு ஊழலும் கிரிமினல் குற்றங்களும் தீவிரமாகின்றன. கடந்த 2000-வது ஆண்டில் சாங்குயிங் நகரில் விரைவான தொழில் வளர்ச்சி என்ற பெயரில் ஏற்றுமதி அடிப்படையிலான தொழில்பூங்காக்களும் அடுக்குமாடிக் குடியிருப்புகளும் உருவாகத் தொடங்கியதும், அதே வேகத்தில் ஊழலும் கிரிமினல் குற்றங்களும் பெருகத் தொடங்கின.

ஊழல்-கிரிமினல் 'கம்யூனிஸ்டு' அதிகாரிகள், மாஃபியா குண்டர்படைத் தலைவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட வெளிநாட்டு ஆடம்பர சொகுசு கார்கள்.



முதலாளித்துவத்தை ஒழிக்காமல், இக்கிரிமினல் குற்றக் கும்பல்களுக்கும் ஊழல் பெருச்சாளிகளுக்கும் மரணதண்டனை முதல் கடுமையான தண்டனைகள் விதிப்பதன் மூலம், தீவிரமாகிவரும் ஊழலையும் கிரிமினல் குற்றங்களையும் ஒழித்துவிட முயற்சிக்கிறது சீன முதலாளித்துவ அரசு. கடந்த ஆண்டில் உலகிலேயே மிக அதிகமாக மரணதண்டனை விதிக்கப்பட்ட நாடு சீனாதான். இப்படி கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்ட போதிலும் ஊழலும் கிரிமினல் குற்றங்களும் குறையவில்லை. மாறாக, மேலும் தீவிரமாகிக் கொண்டே வருகிறது. ஏனென்றால்,முதலாளித்துவமும் கிரிமினல் குற்றக் கும்பல்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

மகத்தான சீனப் புரட்சியின் 60-வது ஆண்டு விழாவை உலகெங்குமுள்ள புரட்சிகர-ஜனநாயக சக்திகள் கொண்டாடிவரும் இத்தருணத்தில், சீன நாடானது முதலாளித்துவத்தின் எல்லா கடைகோடி கழிசடைத்தனங்களையும் கொண்டு சீரழிந்து நிற்கிறது. கடந்த 30 ஆண்டுகளாக அந்நாடு பின்பற்றிவரும் முதலாளித்துவம், இன்று அந்நாட்டையே அச்சுறுத்தும் அபாயமாக மாறி, நாட்டையும் மக்களையும் வதைத்துக் கொண்டிருக்கிறது. சீரழிந்த சீனா, இன்னுமொரு பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியை எதிர்நோக்கி நிற்கிறது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவின் சீன எதிர்ப்புக் கூச்சல்கள்:
# தேச பக்தியா? பிராந்திய மேலாதிக்கமா?

**பாக். எதிர்ப்பைத் தீவிரப்படுத்த முடியாத சூழ்நிலையால், சீன எதிர்ப்பைத் தூண்டிவிடுகிறது, இந்திய ஆளும் கும்பல்.**

மீண்டும் சீன எதிர்ப்பு தேசிய வெறி இந்திய ஆளும் வர்க்கங்களால் கிளறி விடப்படுகிறது. புத்த மதகுருவான தலாய் லாமா அண்மையில் அருணாச்சலப் பிரதேசத்துக்கு 'ஆன்மீகப் பயணம்' சென்றதற்கு சீனா எதிர்ப்பு தெரிவித்ததையும், அம்மாநிலத்தின் தவாங் மாவட்டப் பகுதியைத் தனது பாரம்பரிய பிரதேசம் என்று சீனா உரிமை கோருவதையும் வைத்து, இப்போது ஊடகங்கள் சீன எதிர்ப்பு தேசிய வெறியைக் கக்குகின்றன. சீன ஊடுருவல் அதிகரித்துவிட்டது என்றும், அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவுக்கே சொந்தமானது என்றும், சீனக் கொடியையும் சீனப் பொருட்களையும் எரித்து இந்து வெறியர்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். ''சீன ஊடுருவல் அதிகரித்துவிட்டது; மைய அரசு எஃகு போன்ற முதுகெலும்பில்லாமல் கைகட்டி வேடிக்கை பார்க்கிறது'' என்று சாடி அறிக்கை வெளியிட்டார் பார்ப்பன-பாசிச ஜெயலலிதா. பா.ஜ.க. தலைவர்களும் முலயம் சிங் உள்ளிட்ட இதர எதிர்க்கட்சித் தலைவர்களும் பிரதமரைச் சந்தித்து உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரினர்.

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே எல்லை சச்சரவு நீடித்துவரும் நிலையில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உண்மையில் சீன ஊடுருவல் அதிகரித்துவிட்டதா? அந்நாடு இந்தியாவை ஆக்கிரமிக்கத் துடிக்கிறதா? அதனால்தான் இப்போது சீன எதிர்ப்பு என்பது முக்கிய விவகாரமாகிவிட்டதா? அதெல்லாம் இல்லை. அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த்தந்திரத் திட்டப்படியே, அதன் விசுவாச அடியாளான இந்தியா, இப்போது சீன எதிர்ப்பு தேசிய வெறியைத் திட்டமிட்டு கிளறிவிட்டு வருகிறது.

புதிய நூற்றாண்டுக்கான அமெரிக்காவின் திட்டம், ஆசிய கண்டத்தில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோருகிறது. இந்த மேலாதிக்க நோக்கத்திற்காக இந்தியாவை அடியாளாகப் பயன்படுத்திக் கொள்ளவும் விழைகிறது. கடந்த 2005-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த அப்போதைய அமெரிக்க அரசுச் செயலரான கண்டலீசா ரைஸ், ''இந்தியா ஒரு உலக சக்தியாக மாறுவதற்கு சந்தேகத்திற்கிடமின்றி அமெரிக்கா உதவும்'' என்று அறிவித்தார். இதற்காகவே ஏங்கிக் கொண்டிருந்த இந்தியா, அணுசக்தி ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவின் நோக்கத்தை நிறைவேற்றி, அமெரிக்காவின் தெற்காசிய அடியாளாகப் பரிணமித்துள்ளது. அமெரிக்காவின் விசுவாச தெற்காசிய அடியாளாகச் செயல்படுவதன் மூலம், வட்டார மேலாதிக்க வல்லரசாக வளர்ந்து தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவே இந்திய ஆளும் வர்க்கங்களும் விரும்புகின்றன.

அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான புதிய இராணுவ ஒப்பந்தத்தின் மூலம், அமெரிக்காவின் ஆயுதங்களையும் இராணுவத் திட்டங்களையும் இந்தியா பெறுவதற்கு வழி திறக்கப்பட்டது. மேலும், ஐ.நா. மன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் பிற நாடுகளில் அமெரிக்கப் படைகளும் இந்தியப் படைகளும் பயங்கரவாதத்துக்கு எதிராக கூட்டு நடவடிக்கைகளில் ஈடு




படவும் - அதாவது, அமெரிக்காவின் அடியாளாகச் செயல்படவும் இந்த ஒப்பந்தம் கதவை அகலத் திறந்து விட்டுள்ளது. எனவேதான், இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ''இது தெற்காசியாவில் மிகப் பெரிய அச்சுறுத்தல்'' என்று சீனா தெரிவித்தது.

அமெரிக்காவுக்கு அடியாள் வேலை செய்யும் ஏற்பாட்டின்படியே, ''அனைத்துலக அமைதிப் படை'' என்ற பெயரில் ஆப்பிரிக்காவின் காங்கோ முதல் பல நாடுகளுக்கு, அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுடன் இந்தியா தனது படைகளை அனுப்பியது. ஆப்கானில் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளுக்கு உதவியாக கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அமெரிக்காவின் ஒப்புதலுடன் இலங்கையில் ஈழத் தமிழர்



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு எதிரான மிகக் கொடிய இன அழிப்புப் போரை சிங்கள இனவெறி பாசிச அரசுடன் இணைந்து இந்தியா நடத்தியது. நேபாளத்தில் மன்னராட்சி வீழ்த்தப்பட்டு, புதிதாக ஆட்சிக்கு வந்த மாவோயிஸ்டுகள் சீனாவுடன் புதிய வர்த்தக ஒப்பந்தம் போடுவதை எதிர்த்தது. இறையாண்மை மிக்க ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் அத்துமீறி தலையிட்டு, நேபாள இராணுவத் தளபதியைப் பதவி நீக்கம் செய்யக் கூடாது, பசுபதிநாதர் கோயில் பூசாரியை மாற்றக் கூடாது என்று மாவோயிஸ்டுகளை மிரட்டியது. இந்த அச்சுறுத்தல்களுக்கு அடிபணிய மறுத்து மாவோயிஸ்டுகள் பதவி விலகியதும், நேபாளத்தில் இந்திய விசுவாச பொம்மையாட்சியை நிறுவியுள்ளது.

''இந்தியாவும் அமெரிக்காவும் நேபாளத்தைத் தமது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்து சீனாவைச் சுற்றிவளைத்து அச்சுறுத்திப் பணியவைக்கும் தமது போர்த்தந்திர நோக்கத்துடன் காய்களை நகர்த்துகின்றன. நேபாளத்தை இதற்கான தளமாகப் பயன்படுத்த அவை முயற்சிப்பதாலேயே, நேபாள உள்விவகாரங்களில் அவை அதிகமாகத் தலையிடுகின்றன'' என்று நேபாள மாவோயிஸ்டுகள் வெளிப்படையாகவே குற்றம் சாட்டுகின்றனர்.



காஷ்மீரின் லடாக் பிராந்திய எல்லையில் சீனா ஊடுருவி விட்டதாகக் கூச்சலிட்டு, சீன அரசின் உருவப் பொம்மையை எரித்து ஜம்மு நகரில் ஆர்ப்பாட்டம் செய்யும் இந்துவெறி பாசிஸ்டுகள்: தேசபக்தியா? தேசியவெறியா?

தற்போது பொருளாதார ரீதியாக வளர்ந்து வரும் சீனா, தெற்காசியாவில் தனது செல்வாக்கை நிலைநாட்டும் நோக்கத்தோடு இலங்கை, பாகிஸ்தான் முதலான நாடுகளில் மேற்கொண்டுவரும் முயற்சிகளைக் காரணம் காட்டியும், சீன ஆக்கிரமிப்பு பூச்சாண்டி காட்டியும் இந்தியா தனது மேலாதிக்கத்தை மறைத்துக் கொண்டு வருகிறது. இதற்காகவே, ஏற்கெனவே நிலவிவரும் சீன எதிர்ப்பை உசுப்பிவிட்டு குறுகிய தேசிய வெறியை ஊட்டி வருகிறது. அமெரிக்காவின் ஏற்பாட்டின்படி, இப்போது பாகிஸ்தானுடன் இந்தியா இணக்கம் காட்டி வருகிறது. பாக். எதிர்ப்பு தற்போது மங்கத் தொடங்கி சீன எதிர்ப்பு தீவிரமடைந்து வருகிறது.

ஏற்கெனவே ''சீனாவிலிருந்து மலிவுவிலை நுகர் பொருட்கள் இந்தியாவிற்குக் கடத்தி வரப்படுகின்றன; இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க சீனா சதி செய்கிறது; காஷ்மீரில் அக்சாய் சின் பகுதியில் 43,180 சதுர கி.மீ. பரப்பளவுக்கு ஆக்கிரமித்துள்ளது; வடகிழக்கே அருணாச்சலப் பிரதேசத்தில் தவாங் மாவட்டத்தை சீனா உரிமை கோருகிறது; காஷ்மீர், அருணாச்சலப் பிரதேசம், உத்ராஞ்சல் ஆகிய மாநில எல்லைப்புற பகுதிகளில் சீனா அத்துமீறி ஊடுருவியுள்ளது; காஷ்மீரின் லடாக் பிராந்திய எல்லையில் சிவப்பு மையில் அடையாளமிட்டுவிட்டுச் சென்றுள்ளது; சீனாவுக்குச் செல்லும் காஷ்மீர் மற்றும் அருணாச்சலப் பிரதேச மக்களுக்கு சீனத் தூதரகம் தனியாகக் கடவுச்சீட்டு (விசா) வழங்கியுள்ளது; எல்லையோரங்களில் சாலைக் கட்டுமானங்களையும் இராணுவ முகாம்களுக்கான கட்டுமானங்களையும் உருவாக்கி வருகிறது'' என்றெல்லாம் ஊடகங்கள் அவதூறு செய்திகளைத் திட்டமிட்டு பரப்பி வந்தன.

> புதிய நூற்றாண்டுக்கான அமெரிக்காவின் திட்டம், ஆசிய கண்டத்தில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோருகிறது. இந்த மேலாதிக்க நோக்கத்திற்காக இந்தியாவை அடியாளாகப் பயன்படுத்திக் கொள்ளவும் விழைகிறது.

கடந்த ஆகஸ்டு மாதத்தில் அருணாச்சலப் பிரதேச வளர்ச்சித் திட்டங்களுக்காக இந்தியா, ஆசிய வளர்ச்சி வங்கியிடம் கடன் பெற முயற்சித்த போது, அருணாச்சலப் பிரதேசம் சச்சரவுக்கு உட்பட்ட



படிப்பகம்

பகுதி என்பதால் கடனுவி செய்யக் கூடாது என்று சீனா தடுத்து நிறுத்தியது. இவ்வாண்டின் தொடக்கத்தில் பிரதமர் மன்மோகன் சிங் அருணாச்சலப் பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டதற்கு சீனா கடும் ஆட்சேபம் தெரிவித்தது. இவையனைத்தையும் காட்டி ஊடகங்கள் சீன எதிர்ப்பு தேசியவெறியை மூர்க்கமாகக் கிளறிவிட்டன. கோகோ கோலாவின் ஆதிக்கத்தையும், சில்லரை வணிகத்தில் அந்நிய-இந்தியப் பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தையும் எதிர்க்க முன்வராத ''இந்தியா டுடே'', சீன பொம்மைகளாலும் சாக்லெட்டுகளாலும் இந்தியப் பொருளாதாரமும் இந்தியக் குழந்தைகளும் பாதிக்கப்படுவதாக ஒப்பாரி வைத்து சீனாவைக் குறிவைத்து தேசியவெறியூட்டுகிறது.

சிக்கிம் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் கெராங் எனுமிடத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் சீன இராணுவம் இந்தியப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ஒரு கட்டுக்கதை பரப்பப்பட்டது. ஆனால் இந்திய-திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை என்று மறுப்பு தெரிவித்துள்ளதோடு, இப்பொய்ச் செய்தியை வெளியிட்டு நாட்டு மக்களைப் பீதியூட்டிய குற்றத்திற்காக இரு பத்திரிகை செய்தியாளர்கள் மீது வழக்கும் பதிவு செய்துள்ளது. சீனா, இந்திய எல்லையில் எந்தவித ஊடுருவலையும் நடத்தவில்லை என்று வெளியுறவுத் துறை அமைச்சகமும் இராணுவ அமைச்சகமும் அறிவித்துள்ளன.

மேலும், டெல்லியில் இப்தார் விருந்தளித்த பிரதமர் மன்மோகன் சிங்கிடம், இந்திய எல்லைப்புற பகுதிகளில் சீனப் படைகள் ஊடுருவியுள்ளனவா என்று செய்தியாளர்கள் கேட்டபோது, அப்படி எந்த ஊடுருவ

## சீனாவின் திபெத்தில் நடந்த இந்திய-அமெரிக்கக் கூட்டுச் சதிகள்

சீனாவில் குயிங் வம்சப் பேரரசு வீழ்ந்ததும் 1913-இல் திபெத் தன்னை சுதந்திர நாடாகத் தன்னிச்சையாக அறிவித்துக் கொண்டது. இருப்பினும் அதை உலகின் எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. அதன்பின் வந்த சீன அரசுகளும் அதை சீனாவின் ஒரு பகுதியாகவே குறிப்பிட்டு வந்தன. 1949-இல் கம்யூனிஸ்டுகள் தலைமையில் சீனாவில் நடந்த புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, சீன மக்கள் குடியரசு தனது பாரம்பரிய பிரதேசங்களை சீனாவுடன் இணைக்கும் இயக்கத்தை மேற்கொண்டது. அதன்படி, திபெத்தும் சீனாவுடன் சுயாட்சி பிரதேசமாக 1951-இல் இணைக்கப்பட்டது. ஆனால், திபெத்தில் அடிமை சாம்ராஜ்ஜியத்தை நடத்தி வந்த லாமாக்கள் இதை ஏற்க மறுத்து, எதிர்ப்புரட்சி சதிகளில் இறங்கினர்.



''தாமரையின் கண்ணீர்'' என்ற நூலின் முகப்பு.

கம்யூனிச சீனாவைச் சுற்றி வளைத்து நசுக்கவும், கம்யூனிசம் பரவுவதைத் தடுக்கவும் திபெத் விவகாரத்தில் அமெரிக்கா மூக்கை நுழைத்தது. திபெத்தின் மீது சீனா ஆக்கிரமித்துள்ளதாகக் குற்றம் சாட்டியது. லாமா படைகளுக்கு அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. ஆயுத உதவிகள் செய்ததோடு, பயிற்சியும் அளித்து இயக்கியது. நேபாளத்தின் வட எல்லையை ஒட்டியுள்ள மஷ்தாங் எனுமிடத்தில் சி.ஐ.ஏ. கூலிப்படைகளின் கொரில்லா தளம் அமைக்கப்பட்டது. 1958-இல் ''கொலராடோ திட்டம்'' என்ற இரகசிய பெயரில் திபெத்தின் ஆண்ட்ருக் கான்போ தாஷி என்ற எதிர்ப்புரட்சி குண்டர்படைத் தளபதியின் கீழ் 200 லாமா குண்டர்களுக்கு சி.ஐ.ஏ. இரகசிய இராணுவப் பயிற்சி அளித்து ஏவியது. 1959-இல் திபெத்தில் அடிமை எஜமானர்களான லாமாக்களுக்கு எதிராக மாபெரும் மக்கள் எழுச்சி வெடித்துப் பரவத் தொடங்கியதும், லாமா கும்பல் இந்தியாவுக்குத் தப்பியோடி வந்து தஞ்சமடைந்தது.

இந்த உண்மைகளை சி.ஐ.ஏ.வில் திபெத்திய சதித் திட்டங்களுக்காக வேலை செய்த ரோஜர் மெக்கார்த்தி என்ற அமெரிக்க உளவாளி ''டியர்ஸ் ஆஃப் லோட்டஸ்'' (தாமரையின் கண்ணீர்) என்ற நூலில் ஆதாரங்களுடன் விவரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

1962-இல் நடந்த இந்திய-சீனப் போருக்குப் பிறகு, திபெத்திய அகதிகளிலிருந்து கொரில்லாப் படையைக் கட்டியமைக்கவும் பயிற்சி அளிக்கவும் நேரு உத்தரவிட்டு வழிகாட்டினார். இதற்கு இந்திய உளவு நிறுவனமான ''ரா'' வும் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வும் ஆயுதப் பயிற்சிகள் அளித்தன. சிறப்பு எல்லைப் படை (எஸ்.எஃப்.எஃப். SFF) என்ற பெயரில் இந்தியப் படைகள் போல இந்தக் கூலிப்படை இயங்கியது. இப்படையைப் பயிற்றுவிக்கவும் வழிகாட்டி இயக்கவும் உ.பி.மாநிலம் டேராடூனுக்கு அருகே சக்ராடா எனுமிடத்தில் ''தாண்டவ் அகாடமி'' என்ற பெயரில் இராணுவப் பயிற்சிப் பள்ளி நிறுவப்பட்டது. திபெத்தில் திடீர்த் தாக்குதல் மற்றும் சீர்குலைவு வேலைகளில் இந்தப் படை ஈடுபடுத்தப்பட்டது. இதற்கு ''எஸ்டாபிளிஷ்மெண்ட் 22'' என்று இரகசிய பெயரிடப்பட்டது.

பின்னர், இந்தப் படை கிழக்கு பாகிஸ்தானில் சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு, ''முக்தி பாஹினி'' என்ற முஜிபுர் ரஹ்மானின் வங்கதேச விடுதலைப் படையாக அவதாரம் எடுத்தது. இந்தப் படையின் மூலம் பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து வங்கதேசம் என்ற இந்திய விசுவாச நாடு இந்திரா காந்தியின் காலத்தில் உருவாக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

லும் நடக்கவில்லை என்றும், ஊடகங்கள் தேவையில்லாமல் இந்த விசயத்தை மிகைப்படுத்துகின்றன என்றும் பதிலளித்துள்ளார்.

இப்படி கடந்த 50 ஆண்டுகளாகவே சீன ஊடுருவல், ஆக்கிரமிப்பு என்ற கூச்சல் தொடர்ந்து நடந்து வருகிறது. அதேசமயம், ‘‘இதைப் பெரிதுபடுத்த வேண்டியதில்லை; அடிக்கடி நடக்கும் சாதாரண நிகழ்ச்சிதான்; பேசித் தீர்த்துக் கொள்ள முடியும்’’ என்று இந்திய ஆட்சியாளர்கள் அறிவிக்கின்றனர். அதேசமயம், சீன எதிர்ப்பு தேசியவெறியையும் கிளறி விடுகின்றனர்.




இந்துவெறி பா.ஜ.க.-சிவசேனா அமிர்தசரஸ் நகரில் சீனக் கொடியையும் சீன விளையாட்டுப் பொம்மைகளையும் எரித்து நடத்தும் ஆர்ப்பாட்டம்: தூபம்போட்டு தூண்டப்படும் சீன எதிர்ப்பு தேசியவெறி.

இப்படித்தான், 1962-இல் இந்திய-சீன எல்லைத் தகராறும் ஊதிப்பெருக்கப்பட்டு முரண்பாடான தகவல்களும் அவதூறுப் பிரச்சாரங்களும் நடத்தப்பட்டு, சீன எதிர்ப்பு தேசியவெறியூட்டப்பட்டது. ஆங்கிலேய காலனிய ஆட்சிக் காலத்தில் மக்மகோன் என்ற நில அளவையாளர் தன்னிச்சையாக அறிவித்த வரைபடத்தின்படி, இந்திய-சீன எல்லைகள் அப்போது வரையறுக்கப்பட்டன. இந்திய-சீன அரசுகளிடையே பரஸ்பரம் பேச்சுவார்த்தைகள் நடந்து எல்லைகள் வரையறுக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்படவில்லை. சச்சரவுக்கு உட்பட்ட பகுதிகளில் இரு நாடுகளும் பாரம்பரிய - அனுபோக உரிமை அடிப்படையில்தான் முரண்படுகின்றன. எனவே, இது பேசித்தீர்க்க வேண்டிய பிரச்சினையாகவே நீடித்து வருகிறது. ஆனால், இந்தியாவோ தீர்மானிக்கப்படாத-சச்சரவுக்குட்பட்ட பகுதிகளையே உரிமை கொண்டாடி, அப்பகுதிகளில் சீனா ஊடுருவிவிட்டதாகக் குற்றம் சாட்டி, அதனடிப்படையில் சீன எதிர்ப்பு தேசியவெறியைக் கிளறிவிடுகிறது.



அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்க்க முன்வராத 'தேசியப்' பத்திரிக்கைகள், சீனப் பொருட்களின் இறக்குமதியால் இந்தியப் பொருளாதாரம் பாதிக்கப்படுவதாக ஒப்பாரி வைக்கின்றன.

இந்திய-சீன எல்லைத் தகராறிலும், 1962-இல் நடந்த இந்திய-சீனப் போரிலும் இந்தியாவின் இத்தகைய இமாலயத் தவறுகளை ‘‘இந்தியாவின் சீனப் போர்’’ என்ற நூலை எழுதிய நிவில் மாக்ஸ்வெல் என்ற ஆங்கிலேயரும், நேருவின் அந்தரங்கச் செயலராக இருந்த பண்டிட் சுந்தர்லாலும் அம்பலப்படுத்தியுள்ளனர். அது குறித்து இந்திய அரசு நியமித்த விசாரணைக் கமிசனின் அறிக்கை இன்றுவரை வெளியிடப்படவுமில்லை. ஆனால், இன்னமும் சீன எதிர்ப்பு தேசியவெறி மூர்க்கமாகப் பரப்பப்பட்டு வருகிறது. தேசியவெறியே தேசபக்தியாக்கப்படுகிறது.

சீனாவை சுற்றிவளைத்து தாக்குவது என்பது, அமெரிக்காவின் உலக மேலாதிக்க போர்த்தந்திரத் திட்டத்தின் ஓர் அங்கம். அத்திட்டப்படி, அதன் தெற்காசிய அடியாளான இந்தியா, சீன எதிர்ப்பு தேசியவெறியைத் திட்டமிட்டுக் கிளறிவிடுகிறது. அதன்படியே தலாய்லாமா இந்தியாவுக்குத் தப்பிவந்த 50-வது ஆண்டையொட்டி, அவரை அருணாச்சலப் பிரதேசத்துக்கு ‘‘ஆன்மீகப் பயணம்’’ என்ற பெயரில் அனுப்பியது. இது சீனாவுக்கு ஆத்திரமூட்டும் செயல் என்று தெரிந்தும், இதன் மூலம் சீன எதிர்ப்பு தேசியவெறியைக் கிளறிவிட்டு ஆதாயம் தேட முடியும் என்பதாலேயே, தலாய்லாமா பயணமும் அதற்கு முன்பாக பிரதமரின் பயணமும் நடத்தப்பட்டுள்ளன. சீன பூச்சாண்டி காட்டி, சச்சரவுக்குட்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

எல்லைப் பகுதிகளில் இராணுவத் தளங்களை நிறுவ முயற்சித்து, அதன் மூலம் அமெரிக்காவின் போர்த்தந்திரத் திட்டத்தை நிறைவேற்ற இந்தியா துடிக்கிறது. இந்திய- அமெரிக்க விசுவாச ஏஜெண்டான தலாய் லாமா, இத்திட்டத்தின்படி ஆட்டுவிக்கப்பட்டுள்ளார்.

காலனிய ஆட்சிக்கு எதிராகப் போராடிய போதிலும் வடகிழக்கிந்திய மாநிலங்கள் எவையும் தேசிய நீரோட்டத்தில் சங்கமித்ததில்லை. 1947-க்குப் பிறகு அவை துப்பாக்கி முனையில் இந்தியக் 'குடியரசு'டன் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டன. அவற்றை 'பாரத மாதா'வின் ''ஏழு சகோதரிகள்''என்று இந்திய ஆட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவற்றில் ஒரு மாநிலமான, கதிரவன் உதிக்கும் மலைப்பகுதி எனப் பொருள்படும் ''அருணாச்சலப் பிரதேசம்'', காலனிய ஆட்சிக் காலத்திலிருந்து வடகிழக்கு எல்லைப்புற பகுதி (NEFA) என்ற பெயரில் குறிப்பிடப்பட்டு வந்தது. அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த நேஃபா, பின்னர் 1972 -இல் மைய அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசமாக மாற்றப்பட்டது. அதன் பின்னர், இந்துத்துவ முறையில் வடமொழியில் அருணாச்சலப் பிரதேசம் என்று பெயரிடப்பட்டு 1987-இல் இந்தியாவின் 24-வது மாநிலமாகச் சேர்க்கப்பட்டது. இம்மாநிலத்தின் தவாங் மாவட்டப் பகுதியை சீனா தனது பாரம்பரிய அனுபோக பகுதி என்று உரிமை கோருகிறது.

தெற்காசியாவில் அமெரிக்காவின் மேலாதிக்கம் இந்தியாவின் மூலம் விரிவடைவதால், அதற்குப் போட்டியாக முதலாளித்துவ நாடான சீனா, இலங்கைக்கு ஆயுத உதவிகள் மற்றும் கட்டுமானத் திட்ட உதவிகள் செய்து தன்பக்கம் இழுக்க முயற்சிக்கிறது. இந்த நோக்கத்திலேயே இலங்கை பாசிச அரசின் ஈழத்தமிழின அழிப்புப் போரை ஆதரித்தது. தெற்காசிய நாடுகளில் சீனா, தனக்கு ஆதரவாக செல்வாக்கு பெற முயற்சிக்கிறதே தவிர, மேலாதிக்கம் செலுத்தக் கிளம்பவில்லை. ஆனால், இந்தியாவோ தனது மேலாதிக்க நலன்களுக்காக நேரடியாகத் தலையிட்டு ஈழப்படுகொலையை நடத்தியதோடு, நேபாளத்திலும் தலையிட்டு தனது பொம்மையாட்சியை நிறுவியுள்ளது. இருப்பினும் இலங்கையில் சீனாவின் தலையீடு அதிகரித்து வருவதாகவும், அதனால் இந்தியாவுக்கு ஆபத்து என்றும் ஆளும் வர்க்க ஊடகங்கள் தேசியவெறியூட்டுகின்றன. இதே வாதத்தை வைத்துதான் தமிழினவாதிகளும் சீன பூச்சாண்டி காட்டி, இந்திய மேலாதிக்கத்தை மூடிமறைத்து வருகின்றனர். இலங்கையின் ஹம்பன்டோடா துறைமுக மேம்பாட்டுத் திட்டத்துக்கு இந்தியா உதவ மறுத்த பின்னர்தான், சீனா அத்திட்டத்துக்கு உதவ முன்வந்தது. ஆனால், இதைக் காட்டி இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் பெருகிவிட்டதென்றும், அது இந்தியாவுக்கு ஆபத்து என்றும் தமிழினவாதிகளில் சிலர் பெருங்கூச்சல் போடுகின்றனர்.



அருணாச்சலப் பிரதேசத்தில் இந்திய-அமெரிக்க மேலாதிக்கவாதிகளின் கைப்பாவை தலாய்லாமா: ஆன்மிகப் பயணமா? சீன எதிர்ப்பு தேசியவெறியூட்டும் செயலா?

> இலங்கையில் சீனாவின் தலையீடு அதிகரித்து வருவதாகவும், அதனால் இந்தியாவுக்கு ஆபத்து என்றும் ஆளும் வர்க்க ஊடகங்கள் மட்டுமின்றி, தமிழினவாதிகளும் சீனப் பூச்சாண்டி காட்டுகிறார்கள்.

இந்திய-சீன எல்லைத் தகராறு பற்றிய பல உண்மைகளும் இந்தியாவின் வட்டார மேலாதிக்கம் பற்றிய உண்மைகளும் இந்நாட்டு வரலாற்றின் இருண்ட பக்கங்களில் புதைந்து கிடக்கின்றன. இந்த உண்மைகள் மறைக்கப்பட்டு, அண்டை நாடுகளுக்கு எதிரான பகைமையும் போர்வெறியும் தேசியவெறியும் தூண்டிவிடப்பட்டு, இந்தியாவின் விரிவாக்க - ஆக்கிரமிப்பு - மேலாதிக்க நடவடிக்கைகள் 'தேசபக்தி' என்ற பெயரால் மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தேசபக்தி என்பது வேறு; தேசியவெறி என்பது வேறு. இரண்டையும் பித்தலாட்டம் செய்துவரும் இந்திய மேலாதிக்கவாதிகளின் முகத்திரையைக் கிழித்தெறியாமல், அண்டை நாடுகளுடன் நியாயபூர்வமான, சமத்துவமான, சமாதான உறவுகளை ஒருக்காலும் நிறுவவே முடியாது. ஆளும் வர்க்கங்களின் தேசியவெறி - போர்வெறியை எதிர்த்து முறியடிக்காமல், எந்த நாடும் மக்களும் ஜனநாயகத்தையோ சுதந்திரத்தையோ நிலைநாட்டவும் முடியாது.

● பாலன்



படிப்பகம்

## மனிதவாழ்வை மறுக்கும் முதலாளித்துவக் கொடுங்கோன்மைக்கு

# மார்க்சிய-லெனினியமே ஒரே மாற்று
# மக்களிடம் கொண்டு செல்லும் கீழைக்காற்று

## தோழர் ஸ்டாலின் 130-வது பிறந்தநாள் சிறப்பு வெளியீடுகள்




○ அராஜகவாதமா? சோசலிசமா?
– ஸ்டாலின்




○ இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும்
– ஸ்டாலின் (மறுபதிப்பு)




○ தோழர் ஸ்டாலின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்தளிக்கும் ஆவணப்படம் (DVD)
– பு.மா.இ.மு., சென்னை.

○ இலங்கை தேசியஇனப் பிரச்சினையும் தீர்வுக்கான தேடல்களும்
– சி.சிவசேகரம்







○ ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா
– கலையரசன்

## சென்னை புத்தகக் கண்காட்சி

(டிச. 30 – சன. 10 வரை, ஜார்ஜ் பள்ளி, பச்சையப்பன் கல்லூரி எதிரில்)

**கீழைக்காற்று விற்பனை அரங்கில் கிடைக்கும்**

⊙ உரைவீச்சுக்களாய்... ⊙ இசைப்பாடல்களாய்... ⊙ அரசியல் போராட்டக் காட்சிப் பதிவுகளாய்...

ம.க.இ.க.-வி.வி.மு.-பு.மா.இ.மு.-பு.ஜ.தொ.மு.-
மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஆகிய அமைப்புகளின் ஒலி (MP3) / ஒளி வட்டுகள் (DVD)
பெரியார், அம்பேத்கார் படைப்புகள் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான
அனைத்து ஆக்கங்களும் எமது ஒரே கூரையின் கீழ்

## கீழைக்காற்று

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை-2. ✆:044-28412367

www.padippakam.com

## தில்லை கோயிலை மீண்டும் தீட்சிதர் கைப்பற்றாமல் தடுக்க...
## அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதற்கான தடையை உடைக்க...

# உச்சநீதி மன்றத்தில் வழக்கு! நீதி தாரீர்!!

### பெருங்கோயில்களில் ஈராயிரம் ஆண்டுகளாக நிலவிவரும் தீண்டாமையை ஒழிக்கப் போராடுவோம்!

தில்லைக் கோயிலை அரசு மேற்கொண்டதற்கும், சிற்றம்பலத்தில் தமிழ் பாடுவதற்கும் எதிராகத் தடையாணை கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார் சுப்பிரமணிய சுவாமி. மேற்கூறிய இரு கோரிக்கைகளையும் போராடி வென்றவர்கள் என்ற முறையில், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) சார்பில் உச்சநீதி மன்றத்தில் எதிர்மனு தாக்கல் செய்துள்ளோம்.

சட்டப்படி பார்த்தால், தற்போது நடைபெறும் வழக்கென்பது அரசுக்கும் தீட்சிதர்களுக்கும் இடையிலானதுதான். மேலோட்டமாகப் பார்த்தால், தில்லைக் கோயிலை அறநிலையத் துறை மேற்கொண்டதை தி.மு.க. அரசின் சாதனையென்றும் சிலர் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால், 2000-ஆவது ஆண்டில், தமிழ் பாடிய குற்றத்துக்காக சிற்றம்பல மேடையிலிருந்து சிவனடியார் ஆறுமுகசாமி தீட்சிதர்களால் அடித்து வீசப்பட்ட போதும் தி.மு.க. ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது என்பதையும்; அப்போது, அடித்த தீட்சிதர்களுக்கு பிணை வழங்கி வழியனுப்பி வைத்தது போலீசு என்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

ம.க.இ.க-வின் தமிழ் மக்கள் இசை விழாவில் ஆறுமுகசாமி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர்தான், தில்லைக் கோயிலில் தமிழ் பாட முடியாது என்ற உண்மையையே தமிழகம் அறிந்தது. இப்போராட்டத்தை நாங்கள் தொடங்கியபோது, ''வள்ளலார் முதல் வ.சுப.மாணிக்கனார் வரை பலரும் பார்த்துவிட்டார்கள். இப்போது நீங்களா?'' என்று பலர் பரிதாபப் பார்வை பார்த்தார்கள். அதிகாரத் தாழ்வாரங்களெங்கும் ஆள் வைத்திருக்கும் தீட்சிதர்களோ ஆறுமுகசாமியை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

சிற்றம்பலத்தில் தமிழ் பாட இந்து அறநிலையத் துறையின் இணை ஆணையருக்கு மனுச் செய்தோம். அது சம்பிரதாயத்துக்கு விரோதமானது என்று அவர் மறுத்தார். அதனை எதிர்த்து ஆணையரிடம் மேல்முறையீடு செய்தோம். ஆண்டுக்கணக்கில் வழக்கு நடத்தி, தமிழ் பாடலாம் என்ற ஆணையை அவரிடம் வாங்கினோம். உடனே, அதற்கு முன்சீப் நீதிமன்றத்தில் தடை வாங்கினார்கள் தீட்சிதர்கள். பின்னர் கோயில் சம்பிரதாயத்தில் தலையிட அறநிலையத் துறைக்கு அதிகாரம் கிடையாது என்று கூறி, உயர்நீதி மன்றத்தில் அடுத்தடுத்துத் தடை வாங்கினார்கள். அந்தத் தடைகள் அனைத்தையும் தகர்த்தோம். இத்தனைக்குப் பிறகும் அரசாங்கம் சொந்தமாக வாய் திறக்கவில்லை. ஜனவரி 2008-க்குள் தமிழ் பாடும் கோரிக்கை பற்றி அறநிலையத் துறை ஆணையர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தின் ஆணையைப் பெற்று அறநிலையத் துறையை நெருக்கினோம். அப்புறம் பிப்ரவரி 29 அன்று வந்தது அரசு ஆணை. பின்னர் மார்ச் 2, 2008 அன்று தமிழை அரங்கேற்றினோம்.



இந்து அறநிலையத் துறை ஆணையர் தில்லை – சிற்றம்பலத்தில் தமிழ் பாட உத்தரவிட்டதையடுத்து, தேவாரம் பாடுவதற்காக சிவனடியார் ஆறுமுகசாமி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படும் காட்சி. (கோப்புப் படம்)

இது தமிழ் அரங்கேறிய கதையின் இரத்தினச் சுருக்கம். இதன் பொருட்டு ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய அமைப்புகள் நடத்திய பொதுக்கூட்டங்கள், தெருமுனைக் கூட்டங்கள், ஒரு இலட்சம் கையெழுத்து இயக்கம், ஊடகங்களில் பேட்டிகள், தில்லையிலிருந்து சென்னை உயர்நீதி மன்றத்துக்கும் அறநிலையத் துறைக்கும் சில நூறு முறை நடந்த நடைகள், பாட முயன்று சிறை சென்ற போராட்



படிப்பகம்

www.padippakam.com

டங்கள், தடியடி ஆகிய அனைத்தும் இந்த நான்கு ஆண்டுப் போராட்டத்தில் இரத்தமும் சதையுமாகக் கலந்திருக்கின்றன. முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் வீ.வீ.எஸ், முன்னாள் நகர்மன்றத் தலைவர் வி.எம்.எஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த காவியச்செல்வன், பா.ம.க சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன், பேரா.பெரியார்தாசன் ஆகியோர் இப்போராட்டத்திற்குத் துவக்கமுதலே துணை நின்றவர்கள்.

தமிழை அம்பலத்தில் ஏற்றிய மறுகணமே, தீட்சிதர்களின் இடுப்பிலிருந்து கோயில் சாவிக்கொத்தை இறக்குவதற்கான போராட்டத்தில் கவனத்தைக் குவித்தோம். தமிழுக்காக நடத்திய போராட்டத்தின் ஊடாகத்தான் தில்லைக் கோயில் குறித்த பல சிதம்பர இரகசியங்களையும் அறியப் பெற்றோம்.



அறநிலையத் துறை ஆணையரின் உத்தரவைப் புரட்சிகர அமைப்புகள் நடைமுறைப்படுத்த முயன்ற பொழுது, அதற்கு ''நந்தி''யாக நின்றது, தி.மு.க. அரசின் போலீசு. (கோப்புப் படம்)

நீதிக்கட்சியின் ஆட்சி முதல் தற்போதைய கருணாநிதி ஆட்சி வரை பல அரசாங்கங்கள், இக்கோயிலை அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கொண்டு வர முயன்றிருக்கின்றன. ஆனால், அத்தகைய முயற்சிகள் மர்மமான காரணங்களுக்காகப் பாதியில் கைவிடப்பட்டிருக்கின்றன. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தீட்சிதர்களின் முறைகேடுகள் அம்பலமாகி, கோயிலை அறநிலையத்துறை எடுக்கும் தருணத்தில், இந்திரா காந்தியின் தலையீட்டால் எம்.ஜி.ஆர். அரசு பின்வாங்கியது. 1997-இல் சென்னை உயர்நீதிமன்றம் நகைக்களவு போன்ற குற்றங்களுக்காக கிரிமினல் வழக்கு போட்டு தீட்சிதர்களை உள்ளே தள்ளுமாறு தனது தீர்ப்பிலேயே அறிவுறுத்தியது. ஆனால், தி.மு.க. அரசு செய்யவில்லை. தீர்ப்பின்படி 1997-இல் கோயிலில் திறக்கப்பட்ட நிர்வாக அதிகாரியின் அலுவலகத்தையும் அடித்து உடைத்தார்கள் தீட்சிதர்கள். அதற்கும் தீட்சிதர்கள் மீது வழக்கு இல்லை. காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர் அழகிரி கோயிலை எடுக்கவேண்டாமென்று கருணாநிதிக்கு சட்டமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தார். அதன் பின், மீளா உறக்கத்தில் ஆழ்ந்த வழக்கை எழுப்ப அரசு முயற்சிக்கவில்லை.

2008-இல், இவ்வழக்கில் நாங்கள் இணைந்து (இம்பிலீட்) கொள்கிறோம். அரசுக்கும் எங்களுக்கும்தான் பிரச்சினை. இவர்களுக்கு வழக்கில் தொடர்பில்லை என்று எங்களை மூர்க்கமாக எதிர்க்கிறார்கள் தீட்சிதர்கள். நாங்கள் நுழைந்த பின், வழக்கை இழுத்தடிப்பதற்கு தீட்சிதர்கள் செய்த ஒவ்வொரு முயற்சியையும் முறியடித்து, இறுதி விசாரணைக்கு வழக்கை நெட்டித் தள்ளிக் கொண்டு வந்தோம். தீட்சிதர்கள் கோயில் நிலங்களை விற்றதற்கான ஆதாரங்களை அரும்பாடுபட்டுச் சேகரித்து அவற்றையும் தாக்கல் செய்தோம்.

கோயிலை அரசு மேற்கொண்டது சரி என்றும், தீட்சிதர்களுக்கு கோயில் சொந்தமல்ல என்றும் 2009 பிப்ரவரியில் நீதிபதி பானுமதி தீர்ப்பளித்தார். இதற்கெதிராக உயர்நீதி மன்ற பெஞ்சில் மேல்முறையீடு செய்தார்கள் தீட்சிதர்கள். பிறகு வழக்கில் சு.சாமி நுழைந்தார். முட்டையடி, உயர்நீதிமன்றத் தடியடி சம்பவங்களைத் தொடர்ந்து வழக்கு தள்ளிப்போகிறது. பிறகு, கோயிலை அரசு எடுத்தது சரியே என்று இரண்டு நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற பெஞ்சும் தீர்ப்பளித்தது.

1885-இல் தீட்சிதர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, அவர்களே நீதிமன்றத்தை நாடிய நாள் முதல், இன்றுவரை இந்தக் கோயில் தங்களுடைய சொத்து என்றோ, இதன் பரம்பரை அறங்காவலர்கள் தாங்கள்தான் என்றோ நிரூபிக்கத்தக்க எந்தவொரு ஆவணத்தையும் அவர்கள் எந்த நீதிமன்றத்திலும் கொடுத்ததில்லை. எந்தவித ஆதாரமும் இல்லாமல் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள இந்தச் சொத்தை, 1925 நீதிக்கட்சி ஆட்சிக்காலம் முதல் இன்றுவரை அவர்கள் கைப்பற்றி வைத்திருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம், சட்டத்தின் சந்து பொந்துகளில் புகுந்து தப்பிக்கும் அவர்களது வழக்குரைஞர்களின் திறமை மட்டுமல்ல; தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று கூறும் நாயன்மார்கள் எல்லாக் கட்சிகளிலும், அதிகார வர்க்கத்திலும், போலீசிலும், நீதித்துறையிலும் நிறைந்திருக்கிறார்கள் என்பதுதான். இவர்களுடைய உதவி இல்லாமல், பல பத்தாண்டுகள் ஒரு வழக்கை விசாரணைக்கே வராமல் தீட்சிதர்களால் இழுத்தடித்திருக்க முடியாது.

தில்லைக் கோயிலுக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது என்று தகவல் அறியும் உரிமையின் கீழ் நாங்கள் கேட்டபோது, 493 ஏக்கர் என்று 2008-இல் எங்களுக்கு பதில் வந்தது. 2009 பிப்ரவரியில் 2500 ஏக்கர் என்று உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தார், அரசு வழக்குரைஞர். 3487 ஏக்கர் என்று இந்த மாதம் பத்திரிகைகளுக்கு பேட்டி அளிக்கிறார் அறநிலையத்துறை ஆணையர். எது அறுதி உண்மை?



படிப்பகம்

www.padippakam.com

தீட்சிதர்களின் மோசடியை நிரூபிக்க ஒரு சில சொத்து விற்பனை குறித்த ஆவணங்களை அரும்பாடு பட்டுத் திரட்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம். அரசு நினைத்திருந்தால் ஒரே நாளில் அத்தனை விவரங்களையும் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க முடியும். செய்யவில்லை.

தீட்சிதர்கள் மீதான கொலை, திருட்டு உள்ளிட்ட பல வழக்குகளை சிதம்பரம் போலீசு அப்படியே அமுக்கி விட்டது. அதற்கெதிராகவும் உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்திருக்கிறோம். போலீசு தலைமைப் பீடமோ இன்னும் தீட்சிதர்கள் பக்கம்தான் நிற்கிறது.

நாங்கள் உள்ளே புகுந்து நெட்டித் தள்ளியிராவிட்டால், தமிழக மக்கள் மத்தியில் இப்பிரச்சினையைப் பரவலாகக் கொண்டு சென்றிருக்காவிட்டால், அரசு ஒரு அங்குலம்கூட நகர்ந்திருக்காது என்பதே உண்மை. இன்னமும் நகரவில்லை என்பதும் உண்மை. பிப்ரவரி 29 அன்றே நீதிபதி பானுமதி அளித்த தீர்ப்பில், ஒரு வாரத்திற்குள் நிர்வாகத்தை அறநிலையத் துறை அதிகாரிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று தீட்சிதர்களுக்கு உத்தரவிட்டிருந்தும், தீட்சிதர்கள் நிர்வாக அதிகாரியிடம் இதுவரை சாவியை ஒப்படைக்கவில்லை. அரசு கேட்கவும் இல்லை; நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரவும் இல்லை. இதுதான் உண்மை நிலை. இதன் காரணமாகத்தான் பட்டபாடெல்லாம் வீண் போய்விடக் கூடாதே என்று உச்சநீதி மன்றத்துக்கும் நாங்கள் சென்றிருக்கிறோம்.

> சேதுக்கால்வாய்–முல்லைப் பெரியாறு வழக்குகளைப் பார்த்த பின்னால், தில்லைக் கோயில் வழக்கைத் தமிழக அரசிடம் ஒப்படைத்துவிடும் நம்பிக்கை எங்களுக்கு இல்லை. நாங்கள் நம்பியிருப்பது தமிழ் மக்களாகிய உங்களைத்தான்!

இரண்டாவது வழக்கு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராதல் தொடர்பானது. 2006- இல் தமிழக அரசு இதற்கான அரசாணையைப் பிறப்பித்தது. பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை எடுத்ததற்காக விழாவும் நடந்து முடிந்து விட்டது. ஆனால், அரசாணை பிறப்பித்த மறுகணமே, மதுரையைச் சேர்ந்த பட்டர்கள் அதற்கு உச்ச நீதி மன்றத்தில் தடையாணை பெற்றுவிட்டனர். அதன் பின்னர், இதற்கான அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகராக்க வழிசெய்யும் பிரிவைத் தமிழக அரசு நீக்கிவிட்டது.

அதே நேரத்தில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பல்வேறு சாதிகளிலும் பிறந்த சுமார் 250 மாணவர்கள் பயின்று முடித்து விட்டார்கள். படித்து முடித்து ஒன்றரை ஆண்டு கழிந்த பின்னரும், சான்றிதழ்கூடக் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாணவர்களை ஒரு சங்கமாகத் திரட்டியிருக்கிறோம். அவர்கள் சார்பிலும் உச்சநீதி மன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்துள்ளோம், 2006-ஆம் ஆண்டு முதல் உச்சநீதி மன்றத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் வழக்கை எழுப்புவதற்காக.

அரசியல் சட்டப்பிரிவு 25, 26 ஆகியவற்றுடன் தொடர்புள்ள இந்த வழக்கு மிகக் கடினமானது, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. பார்ப்பன பட்டர்கள் சார்பில் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் பராசரண் ஆஜராகிறார். சிதம்பரம் வழக்குக்கு சுப்பிரமணியசாமி; தீட்சிதர்கள் சார்பில் பிரபல வழக்குரைஞர் கே.கே.வேணுகோபால்.

இவர்களை எதிர்த்து வாதாடத்தக்க மூத்த வழக்குரைஞர்களை நாம் நியமிக்க வேண்டும். படாத பாடுபட்டு மக்கள் மத்தியில் நிதி திரட்டி சென்னை உயர்நீதி மன்றச் செலவுகளை சமாளித்துவிட்டோம். இது உச்சநீதி மன்றம். இலட்சங்களுக்குக் கீழ்ப்பட்ட ரூபாய்கள் அங்கே செலாவணியிலேயே இல்லை. எனவே, உங்களுடைய வழக்கு நிதியினை ஆயிரங்களில் எதிர்பார்க்கிறோம்.

இது சக்திக்கு மீறிய விடயம் என்று தமிழக அரசின் கைகளில் நம் தலைவிதியை ஒப்படைத்து விடலாம். ஆனால், சேதுக்கால்வாய் வழக்கையும், முல்லைப் பெரியாறு வழக்கையும் பார்த்த பின்னால், அத்தகைய நம்பிக்கை எங்களுக்கு இல்லை. நாங்கள் நம்பியிருப்பது தமிழ் மக்களாகிய உங்களைத்தான். இவை சாதி, மொழித் தீண்டாமைக்கு எதிரான வழக்குகள் மட்டுமல்ல, தமிழக மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் நிலம், பல்லாயிரம் கோடி சொத்துகளை மீட்பதற்கான வழக்குகள். பார்ப்பன ஆதிக்கத்தையும் தீண்டாமையையும் இந்து மத உரிமையாக நிலைநாட்டிக் கொள்வதைக் கேள்விக்குள்ளாக்கும் வழக்குகள். தீர்ப்புகள் எதுவானாலும், தமிழகம் எழுப்பும் கேள்விகள் நாடெங்கும் ஒலிக்க வேண்டும்.

தில்லைக் கோயிலிலும், மதுரைக் கோயிலிலும் இன்னபிற பெருங்கோயில்களிலும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தோர் அர்ச்சகர்களாக நிற்பதையும், தில்லைக் கோயிலின் தெற்கு வாயிலை அடைத்திருக்கும் தீண்டாமைச் சுவர் நிற்க முடியாமல் வீழ்வதையும் மனக்கண்ணில் எண்ணிப் பாருங்கள்! அந்தக் கனவை நனவாக்க நிதி தாருங்கள்!

— மனித உரிமைப் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு.

காசோலை அல்லது வரைவோலை அனுப்ப வேண்டிய முகவரி:

**S. Raju,**
**S.B. A/c No. 1210 155 24043,**
**Karur Vysia Bank, Vridhachalam Branch.**



படிப்பகம்

www.padippakam.com

## “லவ் ஜிகாத்”

# ஆர்.எஸ்.எஸ்.-இன் அவதூறுக்கு நீதிமன்றமே பக்கமேளம்!

**முசுலீம் மக்கள் பற்றி ஆர்.எஸ்.எஸ். பரப்பி வரும் அவதூறு – வதந்திகளுள் ஒன்றுதான் “லவ் ஜிகாத்”.**

**வ**டக்கு கர்நாடகாவிலுள்ள பரிமாரு கிராமத்தைச் சேர்ந்த அனிதா என்ற இளம் பெண் கடந்த ஜூன் மாதம் காணாமல் போனார். இப்பிரச்சினையைக் கையிலெடுத்த இந்து மதவெறி அமைப்புகள், ‘‘அனிதா, பாகிஸ்தானால் ஆதரிக்கப்படும் ஜிகாதி காதலர்களால் கடத்தப்பட்டு, மதம் மாற்றப்பட்டிருக்கலாம்’’ எனக் குற்றம் சுமத்தியதோடு, கடந்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், ‘‘அனிதா தீவிரவாதிகளின் சதிக்குப் பலியாகிவிட்டதாக’’ப் பிரச்சாரம் செய்து ஆர்ப்பாட்டத்தில் இறங்கின. குருபுரா மடாதிபதி ராஜசேகரானந்தா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, பல்வேறு இந்து மடங்களும் ஆதரவு தெரிவித்தன.

ஒரு சாதாரண கிரிமினல் வழக்கு, அசாதாரணமான மதக்கலவரச் சூழலை ஏற்படுத்துவதை நோக்கி நகர்ந்ததையடுத்து, அனிதா காணாமல் போன விவகாரத்தை விசாரிக்கத் தனி போலீசு படை அமைக்கப்பட்டது. இரண்டே வாரத்தில் குற்றவாளியை மடக்கிப் பிடித்த போலீசார், ‘‘அனிதா, மோகன்குமார் என்ற பாலியல் வக்கிரம் பிடித்த கொலைகாரனால் கொல்லப்பட்ட’’ உண்மையைப் போட்டு உடைத்தனர். மேலும், மோகன்குமார் அனிதாவைப் போல 17 பெண்களைத் திருமணம் செய்து கொள்வதாக ஆசை காட்டிக் கொன்ற பயங்கரமும் போலீசாரின் விசாரணையில் அம்பலமானது.

எனினும், முசுலீம்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பல்வேறு இந்து மதவெறி அமைப்புகளின் சதித்தனமான வெறியூட்டும் பிரச்சாரம் மட்டும் ஓய்ந்துவிடவில்லை. ஆர்.எஸ்.எஸ். கும்பலின் புதிய பரிசோதனைச் சாலையாகக் கருதப்படும் வடக்கு கர்நாடகாவிலும், கேரளாவிலும் ‘‘இந்து’’ மதத்தைச் சேர்ந்த இளம் பெண்கள் காணாமல் போனால், முசுலீம் இளைஞர்கள் தான் திருமண ஆசை காட்டி, மயக்கி, அப்பெண்களைக் கடத்திக் கொண்டு போவதாக ஆர்.எஸ்.எஸ்.கும்பல் முசுலீம் எதிர்ப்புப் பிரச்சாரத்தை இம்மாநிலங்களில் நடத்தி வருகிறது. இப்படி முசுலீம் இளைஞர்களால் திருமண ஆசை காட்டிக் கடத்தப்படும் பெண்கள், மதம் மாற்றப்படுவதோடு, தீவிரவாதப் பயிற்சி அளிக்கப்பட்டு இறக்கி விடப்படுவதாகவும்; போதை மருந்துகளையும் ஆயுதங்களையும் கடத்துவதற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் இந்து மதவெறி அமைப்புகள் பீதியூட்டி வருகின்றன.

இந்து ஜனஜாக்ருதி சமிதி என்ற இந்து மதவெறி அமைப்பு, ‘‘வடக்கு கர்நாடகாவில் மட்டும் ஒவ்வொரு நாளும் மூன்று இந்துப் பெண்கள் முசுலீம் இளைஞர்களால் திருமண ஆசைகாட்டி கடத்தப்படுவதாகவும், அம்மாநிலத்தில் இதுவரை 30,000 பெண்கள் மதம் மாற்றப்பட்டிருப்பதாகவும்’’ கூறி வருகிறது. எவ்வித ஆதாரமுமற்ற இந்த நச்சுப் பிரச்சாரத்தைப் பத்திரிகைகளும் ஊதிப் பெருக்கி வெளியிட்டு வருகின்றன. இந்த இந்து மதவெறி அமைப்பு முசுலீம் இளைஞர்களைப் ‘‘பாலியல் ஓநாய்கள்’’ என வசை பாடுவதோடு, இந்தக் கடத்தலைத் தடுக்க ‘‘ராணாராகினி’’ என்ற அமைப்பைக் கட்டியிருப்பதாகவும் கூறியிருக்கிறது.

‘‘லவ் ஜிகாத்’’ என்ற தனது கண்டுபிடிப்பை ஊதிப் பெருக்குவதற்காகவே, இந்து மதவெறி அமைப்பான இந்து ஜனஜாக்ருதி சமிதி மங்களூரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



இந்துப் பெண்களைத் திருமண ஆசைகாட்டி மயக்குவதற்காக முசுலீம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதாகவும்; இதற்காக வெளிநாட்டில் இருந்து பணம் வருவதாகவும்; இந்தப் பணத்தைக் கொண்டு அந்த இளைஞர்கள் விதவிதமாக ஆடை அணிந்துகொண்டு, விதவிதமான ‘‘பைக்’’குளில் சுற்றி வந்து இந்துப் பெண்களை மயக்குவதாகவும் கதைவிடும் இந்து மதவெறி அமைப்புகள், இந்தக் கட்டுக்கதைக்கு ‘‘காதல் புனிதப் போர்’’ (Love Jihad) என்ற திருநாமத்தையும் சூட்டியுள்ளன. முசுலீம்கள் இதனை ஓர் இயக்கமாக நடத்தி வருவதாகவும், இந்தக் காதல் புனிதப் போருக்கும் அல்-காய்தாவுக்கும் தொடர்பிருப்பதாக



படிப்பகம்

www.padippakam.com

வும் இந்து மதவெறி அமைப்புகள் திகிலூட்டி வருகின்றன.

ஏ.கே.47 துப்பாக்கியை ஏந்தி வரும் தீவிரவாதிகளைக் கண்டு மட்டுமல்ல, கொஞ்சம் வெள்ளையும் சொள்ளையுமாக இருக்கும் முசுலீம் இளைஞர்களைக் கண்டும் இந்துக்கள் பயப்பட வேண்டும் என்பதுதான் இந்த விஷமப் பிரச்சாரத்தின் நோக்கம். இந்து மதவெறி அமைப்புகள் முசுலீம் சமுதாயம் பற்றி பரப்பிவரும் பல்வேறு கட்டுக் கதைகள்-அவதூறுகளில் இதுவும் ஒன்று என அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, இந்த நச்சுப் பிரச்சாரத்திற்கு வலு சேர்க்கும் விதமாக நீதிமன்றமும் போலீசும் நடந்து வருகின்றன.

கேரளாவில் பதனம்திட்டா என்ற நகரில் உள்ள செயிண்ட் ஜான் கல்லூரியில் முதுநிலை பட்டப் படிப்பு படித்து வந்த இரு மாணவிகள், ஷஹான் ஷா, சிராஜுதீன் என்ற இரு முசுலீம் இளைஞர்களைக் காதலித்து, வீட்டை விட்டு வெளியேறித் திருமணம் செய்து கொண்டனர். அந்த இரு மாணவிகளும் மதம் மாறித் திருமணம் செய்துகொண்ட பிரச்சினை கேரள உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது, அந்த இரு பெண்களின் விருப்பத்துக்கு மாறாக, கேரள உயர்நீதி மன்றம் அந்த இரண்டு திருமணங்களும் முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தைக் கூறி, அந்த இரு பெண்களையும் அவர்களது பெற்றோர்களோடு செல்லுமாறு உத்தரவிட்டது.

இந்த வழக்கு விசாரணையின் அடுத்த வாய்தாவின் பொழுது அவ்விரு பெண்களும், ''தாங்கள் கட்டாயமாக மதம் மாற்றப்பட்டு திருமணம் செய்து வைக்கப்பட்டதாக'' பல்டியடித்து புதிய வாக்குமூலம் கொடுத்தனர். இந்த வாக்குமூலத்தைப் பிடித்துக்கொண்ட கேரள உயர்நீதி மன்றம், ''லவ் ஜிகாத் என்றொரு அமைப்பு நிஜமாகவே உள்ளதா? கடத்தல் மற்றும் தீவிரவாதத்தோடு இந்த அமைப்புக்குத் தொடர்புண்டா?'' என்பது உள்ளிட்ட எட்டு கேள்விகளை எழுப்பி, இது பற்றி தீர விசாரித்து அறிக்கை கொடுக்குமாறு கேரள போலீசுக்கு உத்தரவிட்டது. இந்த எட்டு கேள்விகளுக்கும் இல்லை என்று பதிலளித்த கேரள போலீசார், மறுபுறமோ கேரளாவில் ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான கலப்புத் திருமணங்களும், மதமாற்றங்களும் நடந்து வருவதால், இது பற்றி இன்னும் தீவிரமாக விசாரிக்க வேண்டும் என அறிக்கை தாக்கல் செய்தனர். இந்த இரண்டுங்கெட்டான் அறிக்கையைப் பிடித்துக் கொண்ட பத்திரிகைகள் ''லவ் ஜிகாத்'' பற்றி ஊதிப் பெருக்கிப் புலனாய்வுக் கட்டுரைகளை வெளியிட்டன.




ஆர்.எஸ்.எஸ். கும்பலின் முசுலீம் எதிர்ப்பு அவதூறு பிரச்சாரத்திற்குப் பக்கமேளம் வாசிக்கிறது, குமுதம் ரிப்போர்ட்டர்.

தெற்கு கர்நாடகாவைச் சேர்ந்த செல்வராஜ் என்பவர், ''தனது மகள் சில்ஜாராஜை கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 8-ஆம் தேதி முதல் காணவில்லை; அவர் கேரளாவிலுள்ள மதரசா ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்; எனவே, தனது மகளைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும்'' எனக் கோரி கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். இவ்வழக்கு விசாரணையின்பொழுது சில்ஜாராஜ், ''தன்னை யாரும் கட்டாயப்படுத்தவில்லை; தான் விரும்பியே மதம் மாறித் திருமணம் செய்து கொண்டதாக'' வாக்குமூலம் அளித்தார். எனினும் கர்நாடகா உயர்நீதி மன்றம் அப்பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக, சில்ஜாராஜை அவரது பெற்றோரோடு போகுமாறு கட்டளையிட்டது. சில்ஜாராஜ் வலுக்கட்டாயமாகக் கடத்தப்பட்டு, மதம் மாற்றப்பட்டுத் திருமணம் செய்து வைக்கப்பட்டாரா என்பதை ஆராய வேண்டிய நீதிமன்றம், அதனையும் தாண்டி, ''இது தேசிய அளவில் பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது; தேசத்தின் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது'' என்றெல்லாம் இவ்விவகாரத்தை ஊதிப்பெருக்கி, ''லவ் ஜிகாத்'' பற்றி அறிக்கை தருமாறு கர்நாடகா போலீசுக்கு உத்தரவிட்டது.

போலீசார் தமது அறிக்கையில், ''கடந்த மூன்று ஆண்டுகளில் 404 பெண்கள் காணாமல் போயிருப்பதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களுள் 332 பெண்கள் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும், 57 பெண்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் அல்லது காதலனோடு வெளியேறிப் போயிருக்கலாம்'' எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் போலீசாரின் அறிக்கையில் காதலனோடு வெளியேறிப் போன பெண்களுள் ஒருசிலர் இந்து மதத்தைச் சேராதவர்கள்; அதே சமயம், இந்து மதத்தைச் சேர்ந்த பெண்கள் இந்து வாலிபர்களோடு வெளியேறிப் போன வழக்குகளும் உள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடகா போலீசாரின் இந்த அறிக்கை ''லவ் ஜிகாத்'' என்ற இந்து மதவெறிக் கும்பலின் நச்சுப் பிரச்சாரத்தை மறுத்துவிட்ட போதிலும், கர்நாடகா உயர்நீதி மன்றம் சில்ஜாராஜைத் தனது காதல் கணவனோடு போவதற்கு இதுவரை அனுமதி அளிக்கவில்லை. கர்நாடகா பா.ஜ.க. அரசாங்கமோ லவ் ஜிகாத் பற்றி விசாரிக்குமாறு சி.ஐ.டி. போலீசாருக்கு உத்தரவிட்டு, ஆர்.எஸ்.எஸ். நச்சுப் பிரச்சாரத்தின் சூடு தணியாமல் பார்த்துக் கொள்கிறது.

உத்திரப் பிரதேச மாநில அரசுக்கும் லதா சிங் என்பவருக்கும் இடையே உச்சநீதி மன்றத்தில் நடந்த வழக்



படிப்பகம்

www.padippakam.com

கொன்றில், ''வயதுக்கு வந்த ஒருவர் தனக்கு விருப்பமானவரைத் திருமணம் செய்து கொள்ளும் உரிமையை'' ஆதரித்து அந்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாகவும், அத்தீர்ப்புக்கு எதிராகவே கேரளா மற்றும் கர்நாடகா உயர்நீதி மன்றங்கள் நடந்து கொண்டிருப்பதாகவும் வழக்குரைஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், அந்நீதிமன்றங்கள் அரசியல் சாசனம் அளித்துள்ள தனி நபர் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரத்திற்கு எதிராக நடந்து கொண்டிருப்பதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இந்த விவகாரத்தில் கேரளா மற்றும் கர்நாடகா உயர் நீதி மன்றங்களின் நடத்தை 'நீதியை' நிலைநாட்டப் பயன்பட்டதைவிட, ஆர்.எஸ்.எஸ். கும்பலின் சதித்தனமான நச்சுப் பிரச்சாரத்திற்கு இலவச விளம்பரமாக அமைந்து போனதுதான் உண்மை. வடக்கு கர்நாடகாவிலுள்ள கல்லூரிகளில் பயிலும் இந்து மற்றும் முசுலீம் மாணவர்கள் வகுப்பறைகளில் தனித்தனியாக அமரும் அளவிற்கு, அப்பகுதியில் மதப்பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், நீதிமன்றங்களின் ஆர்.எஸ்.எஸ். சார்பான நடத்தை எத்தகைய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்? இந்த விளம்பரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். கும்பல், மதமாற்றத் தடைச் சட்டம் போல், காதல் திருமணத் தடைச் சட்டம், கலப்புத் திருமணத் தடைச் சட்டம் போன்றவற்றையும் கொண்டுவர வேண்டும் எனக் கோரினால்கூட ஆச்சரியப்பட முடியாது!

● செல்வம்

## ஏழைக்கு ஒரு நீதி; பணக்காரனுக்கு ஒரு நீதி.
## - இதுதான் சட்டத்தின் ஆட்சி!

இந்தியாவில், சட்டத்தின் ஆட்சிதான் நடக்கிறது என இன்றும் நம்பிக் கொண்டிருப்பவர்களது அறியாமையை எள்ளி நகையாடும் சம்பவம் ஒன்று அண்மையில் நடந்துள்ளது. விடுதிப் பணிப்பெண் ஜெசிகா லாலை சுட்டுக் கொன்ற வழக்கில் சிறையில் உள்ள மனு சர்மா, நன்னம்பிக்கை விடுப்பில் (பரோல்) வெளிவந்து ஆட்டம் போட்ட விவகாரம், சட்டத்தின் ஆட்சியைச் சந்தி சிரிக்க வைத்துள்ளது.

மூன்று முறை காங்கிரசு எம்.எல்.ஏ.வாக இருந்தவரும், இந்திராகாந்தியின் நெருங்கிய நண்பரும், அரியானா மாநிலத்தின் முக்கிய காங்கிரசுத் தலைவருமான விநோத் சர்மாவின் கோடீசுவர மகன்தான் மனு சர்மா. இவனும் இவனது நண்பர்களும் சேர்ந்துகொண்டு 1999-ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று பின்னிரவில், தில்லியில் ஒரு மது விடுதியில் ஜெசிகா லால் என்ற பணிப் பெண்ணைச் சுட்டுக் கொன்றனர். அந்த வழக்கில் மனு சர்மாவின் குற்றம் நிரூபிக்கப்பட்டதாலும், இக்குடிகார கொலைகாரனுக்கு எதிரான போராட்ட நிர்பந்தத்தாலும் தற்போது தில்லி திகார் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வருகிறான்.



இந்நிலையில், இவனது தாயின் உடல்நிலை சரியில்லாததால் அவரைச் சென்று சந்திக்க வேண்டும் எனவும், மேலும் குடும்பத் தொழிலை கவனிக்க வேண்டியிருப்பதாலும் தனக்கு ஒரு மாத காலம் பரோல் தருமாறு விண்ணப்பித்திருந்தான். இதனைச் 'சட்டப்படி' ஆராய்ந்த தில்லி அரசுச் செயலர், ஜெயில் சூப்பிரண்டு, தில்லி துணை ஆளுநர் உள்ளடங்கிய குழு அவனுக்கு பரோல் அளித்தது. இவனுக்கு ஆதரவாகச் செயல்பட்ட தில்லி முதல்வர் ஷீலா தீட்சித், அவனது பரோலை மேலும் ஒரு மாதம் நீட்டித்துக் கொடுத்தார்.

சிறையிலிருந்து வெளிவந்தவுடன் மனுசர்மா சென்றதோ, நட்சத்திர விடுதியொன்றில் நடந்த மது விருந்துக்கு. இவன் இவ்வாறு சட்டத்தை ஏமாற்றிவிட்டுக் குடித்துக் கூத்தடித்துக் கொண்டிருந்தபோது, உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாகக் கிடப்பதாகக் கூறப்பட்டிருந்த இவனது தாய், அரியனாவில் உள்ள தமது ஓட்டலில் பெண்கள் கிரிக்கெட் குறித்து செய்தியாளர் சந்திப்பு நடத்திக் கொண்டிருந்தார். முதலமைச்சர், துணை ஆளுநர், சிறைத் துறை மற்றும் அரசு அதிகாரிகள் என அனைவரது ஆசியோடும், ஆதரவோடும் இவன் வெளியே வந்து கும்மாளமடித்துக் கொண்டிருக்கிறான். சட்டத்தின் ஆட்சியோ இதனைக் கண்டும் காணாமல் நடித்துக் கொண்டுள்ளது.

இவன் தனது குடும்பத் தொழிலை கவனிக்க பரோல் கேட்டால் கொடுக்கும் அரசாங்கம், இதையே ஒரு விவசாயி தனது வயலில் விவசாயம் பார்க்க வேண்டும் எனக் கேட்டால் கொடுக்குமா? நக்சலைட்டுகளை ஆதரித்தார்கள் என்ற பொய்க்குற்றம் சாட்டப்பட்டு, கணக்கற்ற அப்பாவி மக்கள் பல ஆண்டுகளாகச் சிறையிலடைக்கப் பட்டுள்ளார்கள். இதே சட்டத்தின் பெயரால்தான், செய்யாத குற்றத்திற்காக, விசாரணைக் கைதிகளாகவே பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, இசுலாமிய இளைஞர்கள் பலர் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்குக் கூட சட்டம் இவர்களை அனுமதிப்பதில்லை.

இவர்களுக்கெல்லாம் தனது கொலைக்கரத்தை நீட்டும் இதே சட்டம், பணக்காரர்களுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் தனது வர்க்கப் பாசத்தோடு நேசக்கரத்தை நீட்டுகிறது. சரவணபவன் அண்ணாச்சி முதல் 'கல்வித்தந்தை' ராஜா வரை சட்டத்தை கேலிக் கூத்தாக்கும் மனு சர்மாக்களின் பட்டியலோ நீண்டுகொண்டே செல்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# பொறுக்கி அரசியல்

**முதலாளித்துவ ஜனநாயகத்தின் இழிந்த நிலையை எடுத்துக் காட்டும் காலக் கண்ணாடிதான் பொறுக்கி அரசியல்.**

இப்போது ஆளுமையில் இருப்பது, திராவிட அரசியலோ, தேசிய அரசியலோ அல்ல; பொறுக்கி அரசியல்! இப்போது நடக்கும் அரசியல் பேரணிகள், பொதுக் கூட்டங்கள், அவற்றிலே பேசப்படும் வசனங்கள் - வசவுகள், பேசும் தலைவர்கள் - பேச்சாளர்கள், கூடும் மக்கள் - போடும் கோஷங்கள், அவற்றை ஏற்பாடு செய்யும் அணிகள் - பொறுப்பாளர்கள், இந்த விவரங்களை நிரப்பிக் கொண்டு வரும் செய்தித் தாள்கள் - பத்திரிக்கைகள் இவை அனைத்தும் காட்டுவது பொறுக்கி அரசியலின் ஆளுமையைத்தான்!

''நாட்டில் அரசியல் தரம் தாழ்ந்து விட்டது'' - என்று ஒரு ஓரத்தில் ஒப்புக்குச் சொல்லிக் கொண்டாலும், மெத்தப்படித்த அறிவாளிகளின் கூட்டம் இந்தப் பொறுக்கி அரசியலைச் சகித்துக் கொள்ளவும், அதனுடன் வாழவும், அதையே ரசிக்கவும்கூடப் பழகிவிட்டார்கள். கும்பலை ஈர்ப்பவர்கள் (Crowd Pullers) & கவர்ச்சி நிலை தலைவர்கள் (Charismatic Leaders)தான் நாட்டை ஆளத் தகுதியானவர்கள், உரிமை உடையவர்கள் என்று பச்சையாகவே ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

''பொறுக்கி அரசியல்'' என்று சொல்லும்போது, இன்றைய அரசியலின் இழிநிலை கண்டு வெறுமனே வெறுப்பு - விரக்தி, பொறாமை - ஆத்திரத்திலே சொல்லவில்லை. முதலாளித்துவ அரசியலில் ஒரு வகை, ஒரு வடிவம் என்கிற வரையறுப்போடுதான் சொல்கிறோம். பொறுக்கி அரசியலுக்கு என்று ஒரு சமூக அடிப்படை, ஒரு சித்தாந்த அடிப்படை, ஒரு அமைப்பு அடிப்படை உண்டு. இன்று தமிழக அரசியலில் முழுமையடைந்த வடிவில் பொறுக்கி அரசியல் பிரகாசிக்கிறது. பொறுக்கி அரசியலைத் தோற்றுவித்த பெருமை கருணாநிதிக்கு உண்டு; என்றாலும் அதை வளர்த்து முழுமையாக்கிய பெருமை எம்.ஜி.ஆருக்குத்தான் உரித்ததாகும். செத்த பின்னும் எம்.ஜி.ஆரின் புகழ் பரப்புவது பொறுக்கி அரசியல்தான்.

**பொறுக்கி அரசியலின் சமூக அடிப்படை - உதிரித் தொழிலாளர்கள், கிராமப்புறப் பாமர மக்கள்:**

காலனிய ஆட்சிக்கு முன்பிருந்த இந்தியக் கிராம சமுதாயத்தில் பண்ணை அடிமைகளாகவோ, கொத்தடிமைகளாகவோ, கிராமக் கைத்தொழிலாளர்களாகவோ - ஒரு தொழிலும், வேலையும் கிடைத்து, குறைந்தபட்சம் உயிர் வாழ்வதற்கான அடிப்படையிருந்தது. காலனிய ஆட்சியும், அதன் பிறகு வந்த காங்கிரசு ஆட்சியும் நகரத்துக் குப்பங்களிலும், கிராமங்களிலும் கோடிக்கணக்கான நிரந்தர வேலையோ, வருமானமோ இல்லாத மக்களைக் குவித்திருக்கிறது. கிராம சமுதாயத்தில் முன்பு கிடைத்த குறைந்தபட்சம் உயிர் வாழ்வதற்கான அடிப்படையும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது.

வருடத்தில் பல நாட்கள் வேலை வாய்ப்புகளின்றி பஞ்சத்திலும், பட்டினியிலும் கிடந்து தவிக்கும் கூலி, ஏழை விவசாயிகளோடு, ஒட்டாண்டிகளாகும் நடுத்தர



எம்.ஜி.ஆரின் பொறுக்கி அரசியல் வாரிசு:
பார்ப்பன-பாசிச ஜெயலலிதா.

விவசாயிகளும் சேர்கிறார்கள். அரைகுறையாகக் கல்வி பயின்ற இளைஞர்கள், படித்தும் வேலை வாய்ப்பின்றி, சீரழிந்த கலாச்சாரப் பாதிப்புக்குள்ளான இளைஞர்கள் மூலமாக பொறுக்கி அரசியல் இந்தக் கிராமப்புறப் பாமர மக்களைச் சென்றடைகிறது. ஏற்கெனவே நகரத்து குடிசைப் பகுதிகளில் வழியும் உதிரித் தொழிலாளர்களுடன், கிராமப்புறங்களில் இருந்து விரட்டப்படும்



படிப்பகம்

விவசாய ஏழை மக்கள் நகரத்து வீதிகளில் குடியேறு கின்றனர்.

பல்வேறு சிறு தொழில்களையும், அன்றாடக் கூலி வேலைகளையும் நம்பி வாழும் இவர்கள் நகர்ப்புறச் சீரழிவுகளுக்கு எளிதில் பலியாகிறார்கள். அது மட்டு மின்றி, கள்ளச் சாராயம், சூதாட்டம், விபச்சாரம் போன்ற சமூக விரோதச் சீரழிவுகள் கணிசமான உதிரித் தொழிலாளர்களைக் காவு கொள்கின்றன. நிரந்தர வேலையும், வருமானமும் இல்லாத இவர்களைப் பொறுக்கி அரசியலும் அதன் கவர்ச்சிவாதமும் (பாப்பு லிசம்) எளிதில் ஈர்த்துக் கொள்கிறது. பிழைப்புவாதிகள் அவர்களுக்குத் தலைமையளித்து அணிதிரட்டிக் கொள் கிறார்கள்.

**பொறுக்கி அரசியலின் சித்தாந்த அடிப்படை: கவர்ச்சிவாதம் (பாப்புலிசம் populism)**

பிற்போக்கு சித்தாந்தங்களை வெளிப்படையாக வைத்து பரந்துபட்ட மக்களை இனிமேலும் ஈர்க்க முடி யாது என்கிற அரசியல் ஓட்டாண்டித்தனம் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படுகின்றன. ஆனால், ஆட்சியைப் பிடிப்பதற்கு அவை ஒரு உத்தியைக் கையா ளுகின்றன. தமது பிற்போக்கு சித்தாந்தங்களை மூடி மறைத்துக் கொண்டு பாமர மக்களின், குறிப்பாக உதிரித் தொழிலாளர்கள், ஓட்டாண்டிகளான கிராமப்புற ஏழை களின் அன்றாடத் தேவைகள், விருப்பங்கள், அவை களுக்கேற்ப தமது கொள்கைகளை வகுத்துக் கொண்டு அரசியல் நடத்துகின்றன. தமக்கென்று ஒரு உலகப் பார்வை கொண்ட சித்தாந்தமோ, அதைப் பிரதிநிதித்து வப்படுத்தும் தலைமையோ உருவாக்கிக் கொள்ள முடியாத இந்தப் பாமர மக்கள் கவர்ச்சிவாதத்துக்குள் மூழ்கி, தம்மை அறியாமலேயே பொறுக்கி அரசியலை ஆதரிக்கிறார்கள்.

கவர்ச்சிவாதம் (பாபுலிசம்) என்று சொல்லும்போது எம்.ஜி.ஆர். உருவாக்கியதைப் போன்ற சினிமா கவர்ச் சியை மட்டும் குறிப்பிடவில்லை. அது பொறுக்கி அரசி யலின் கலாச்சார வடிவம். எம்.ஜி.ஆர். உருவாக்கிய ''அண்ணாயிசம்'' பொறுக்கி அரசியலின்-கவர்ச்சிவாதத் தின் முக்கியமான சித்தாந்த அங்கமாகும். ''முதலாளித் துவம், சோசலிசம், கம்யூனிசம்'' மூன்றும் இணைந்தது தான் 'அண்ணாயிசம்' என்று எம்.ஜி.ஆர். அதற்கு விளக் கம் கொடுத்தார். அவரது விளக்கம் எதுவானாலும் அவரது ஆட்சியின் நடைமுறையிலிருந்து 'அண்ணா'யி சத்துக்கான பொருளை நாம் புரிந்து கொள்ள முடியும்.

> பொறுக்கி அரசியலைத் தோற்றுவித்த பெருமை கருணாநிதிக்கு உண்டு; என்றாலும், அதை வளர்த்து முறைமையாக்கிய பெருமை எம்.ஜி.ஆருக்குத்தான் உரித்ததாகும்.

தரகு அதிகார முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுத்துவத் தின் நலன்களைத் தொடர்ந்து கட்டிக் காத்து வளர்ப்பது. அதேசமயம் சோசலிசம், கம்யூனிசம் பற்றிய பாமர மக் களின் மிகமிக மோசமான கருத்துக்கேற்ப கவர்ச்சிவாத (பாப்புலிச) நடவடிக்கைகளை மேற்கொள்வது - இது தான் எம்.ஜி.ஆர். கடைப்பிடித்த அண்ணாயிசம். தேசி யமா, திராவிடமா என்று எம்.ஜி.ஆரின் அரசியல் நிலைப் பாடுகளைக்கூட பாகுப்படுத்திப் பார்க்க முடியாமல் கவர்ச்சிவாதத்தால் மக்களை அடித்து வீழ்த்துவது; மொழி, இன ஒடுக்குமுறை, பாசிச, குரூர, கோமாளித் தனமான ஆட்சி இருந்தாலும் சத்துணவு, பற்பொடி, செருப்பு, வேட்டி, சேலை, தண்ணீர் குடம், வறட்சி, வெள்ளம், தீ-நிவாரண அன்பளிப்புகள் ஆகிய இல வசத் திட்டங்களால் நல்லாட்சி நடப்ப தாக ஒரு பிரமையை உருவாக்குவது; தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர் கள், ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் ஆகிய எந்தச் சமூகப் பிரிவினர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடினாலும் ஈவி ரக்கமின்றி நசுக்கும்போதே, ஆட்சியாளர் களின் வள்ளல் தன்மையை பறைசாற்றும் ''அன்பளிப்பு''களால் வாயடைக்கச் செய் வது. சுருக்கமாகச் சொன்னால், அரசாங்க ''இலவச - அன்பளிப்பு''த் திட்டங்களின் கீழ் கணிசமான அளவு மக்களை வைத்துக் கொள்வதன் மூலம் பாமரத்தனமான சோச லிசத் தோற்றத்தை ஏற்படுத்துவது - இது தான் எம்.ஜி.ஆரின் 'அண்ணாயிசம் - கவர்ச்சிவாதம்.'

தி.மு.க.வின் தேர்தல் வெற்றியைக் குத்தாட்டம் போட்டுக் கொண்டாடும் அக்கட்சியின் மகளிர் அணி: உதிரிப் பாட்டாளி வர்க்கத்தை அடித்தளமாகக் கொண்டு வேர்விட்டுள்ள பொறுக்கி அரசியல்.





படிப்பகம்

www.padippakam.com

### பொறுக்கி அரசியலின் அமைப்பு அடிப்படை: பிழைப்புவாத அரசியல் அமைப்புகள்



இலவசக் கவர்ச்சித் திட்டங்களின் மூலம் பாமர மக்களை ஈர்த்து, முழுவீச்சில் பொறுக்கி அரசியலை வளர்த்து நிலைநாட்டிய பாசிச எம்.ஜி.ஆர்.

காந்தியம், இந்து ராஷ்டிரம், அம்பேத்காரிசம், இனவாதம் போன்ற தேர்தல் அரசியல் கட்சிகள், தமது கொள்கைகளைக் கொண்டு அணிகளை - அமைப்புகளைக் கட்டுகின்றன. ஆனால், பிழைப்புவாதத்தையே அரசியல் கொள்கையாக்கிக் கொண்டுள்ள அரசியல் அமைப்புகள் சில தோன்றியுள்ளன. அவை தமது தலைவர்கள் - அணிகளின் பிழைப்புவாதத்துக்கேற்ற முறையில் அரசியலையும் போராட்டங்களையும் வகுத்துக் கொண்டு இயங்குகின்றன. விவசாயம், வியாபாரம், ஆலை உற்பத்தி, மருத்துவம், காண்டிராக்ட் ஒப்பந்தம், சட்டத்துறை போன்று, சம்பாதிப்பதற்கான ஒரு தொழிலாகக் கருதி இயங்கும் அரசியல் - அமைப்புகளையே பிழைப்புவாத அமைப்புகள் என்கிறோம்.

தலைவர்கள் மட்டுமல்ல; நகர-வட்டங்கள் - கிராமங்களுக்குப் பொறுப்பாக உள்ள கட்சி அணிகள் வரை மேலிருந்து கீழ்மட்டம்வரை பிழைப்புவாதத்தையே அரசியலாகக் கொண்ட அமைப்புகள். எந்தக் கட்சியில், அதிலும் எந்த கோஷ்டியில் இருப்பது வருமானத்துக்குரிய ஆதாயமாக இருக்கும் என்பதைப் பரிசீலித்து, விவாதித்து இவர்கள் தெரிவு செய்கிறார்கள். மேல்மட்டத் தலைவர்கள் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள் மூலம் கொள்ளையடிக்கிறார்கள். அவர்களுக்குக் கீழே உள்ள பிழைப்புவாதிகள் அரசியல் தரகு வேலையை ஒரு தொழிலாக, அதற்கே உரிய விதிமுறைகளுடன் செய்கிறார்கள்.

தேர்தல் காலங்களில் பிரச்சார வேலைகள், ஆள்பிடிக்கும் வேலைகள், ஓட்டுக்களுக்கான பேரங்கள் ஆகியவற்றில் கட்சி நிதியையே சுருட்டிக் கொள்கிறார்கள். மாற்று காலங்களில் சத்துணவுத் திட்டம் போன்ற இலவசத் திட்டங்கள், வெள்ளம் - வறட்சி - தீ விபத்து போன்ற நிவாரணத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னின்று, அதிகாரிகளுடன் சேர்ந்து கொள்ளையடிக்கிறார்கள். இப்போது இந்த வேலைகள் செய்வதற்காக இவ்வளவு தொகை தமக்குக் கமிஷனாகத் தரவேண்டும் என்று உரிமையோடு அவர்களே எடுத்துக் கொள்கிறார்கள். அரசு கடன் வழங்கும் விழாக்கள், போலீசு நிலைய வழக்குகள், வேலை வாய்ப்புகள் - சிபாரிசுகள் போன்றவற்றில் அரசாங்கத்தின் ''அங்கீகரிக்கப்பட்ட'' தரகர்களாக இருக்கிறார்கள்.

கட்சித் தலைவர்களின் எடுபிடிகளாகவும், அரசியல் தூதர்களாகவும் இருந்த பிழைப்புவாதிகள் கிராமப் பஞ்சாயத்து, யூனியன், நகராட்சிகள், மக்கள் கமிட்டிகளில் நியமனம் பெறுவது, பிறகு பஞ்சாயத்து, யூனியன், நகராட்சிகளுக்குத் தேர்தல்களில் நிற்பது என்று முன்னேறி, எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.கள் மட்டுமல்ல, மந்திரிகள் அளவுக்கு உயர்ந்து விட்டார்கள். கூட்டுறவுகள், உள்ளூராட்சிகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களைத் தள்ளி வைத்து இந்தப் பிழைப்புவாதிகளுக்கான மடங்களாக்கிய எம்.ஜி.ஆர். ஆட்சியில், கோவில்கள், வாரியங்கள், பள்ளி-கல்லூரிகள் போன்ற சகல மட்டங்களிலும் கட்சி பிழைப்புவாதிகளுக்கு ''பொறுப்புகள்'' பகிர்ந்தளிக்கப்பட்டன. கட்சிக்காகப் பாடுபடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு ''ஏற்பாடு'' செய்து தருவதைத் தமது பொறுப்பாகவும் - அவர்களது உரிமையாகவும் பகிரங்கமாகவே ஒழுங்குபடுத்தினார், எம்.ஜி.ஆர்.

### பொறுக்கி அரசியல்: தமிழகத்துக்கு ஒரு பாரம்பரியம் உண்டு

பொறுக்கி அரசியலை அறிமுகப்படுத்தி நிறுவி வளர்த்ததில் தமிழ்நாட்டுக்கு ஒரு பாரம்பரியம் - பெருமை உண்டு. அதன் பிதாமகனும் பெருமைக்குரியவரும் கருணாநிதிதான்! மூப்பனார், வாண்டையார், தென்கொண்டார், மன்றாடியார் போன்ற நிலப்பிரபுக்களின் பண்ணை வீடுகளிலும், கோவை நாயுடுகள், வடபாதிமங்கலம் முதலியார், சென்னை டி.டி.கே., சிவசைலம், மதுரை டி.வி.எஸ். போன்ற முதலாளிகளின் விருந்தினர் மாளிகைகளிலும் காமராஜர் தேர்தல் அரசியல் நடத்தி வந்தார். ஓட்டர்களைக் கொத்தடிமைகளாக வைத்துச் சாதி, அரசியல் பேரங்கள் மூலமே ஆட்சி நடத்தினார்.

அந்தச் சாதி அரசியலை வீழ்த்தப் பொறுக்கி அரசியலால்தான் முடிந்தது. ''பேரறிஞர், நாவலர், சொல்லின் செல்வர், கலைஞர், பேராசிரியர்'' போன்றவர்கள் மட்டுமே இருந்திருந்தால், காமராஜரின் சாதி அரசியலை வீழ்த்தியிருக்க முடியாது. அதை முறியடிக்க மாவட்டத்துக்கு ஒரு பொறுக்கி அரசியல் தலைமையை உருவாக்



படிப்பகம்

www.padippakam.com

கினார், கருணாநிதி. நெல்லைக்கு ஒரு தூத்துக்குடி சாமி, மதுரைக்கு ஒரு முத்து, திருச்சிக்கு ஒரு அன்பில், தஞ்சைக்கு ஒரு மன்னை, கோவைக்கு ஒரு ராஜமாணிக்கம், சேலத்துக்கு ஒரு வீரபாண்டி, ஆற்காடுக்கு ஒரு ப.உ.ச. என்று பொறுக்கி அரசியலுக்குரிய சகல தகுதிகள் கொண்ட தலைமையை உருவாக்கியவர், கருணாநிதி.

அவர்கள் திராவிட அரசியலின் ''பழக்கதோஷம்'' உள்ளவர்கள் - கருணாநிதிக்கு விசுவாசமாக நின்று விட்டவர்கள் - என்ற நிலையில், முழுக்க முழுக்க தமது ரசிகர்களை மட்டும் கொண்ட புதிய பிழைப்புவாதக் கட்சியை உருவாக்கினார், எம்.ஜி.ஆர். இன்று, வீரப்பன் கும்பலின் முன்னணித் தலைவர்களான முன்னாள் மந்திரிகள், ஜேப்பியார் போன்றவர்கள், ஜெயலலிதா கும்பலின் கருப்பசாமி பாண்டியன், சேடப்பட்டி முத்தையா, சாத்தூர் ராமச்சந்திரன், மதுரை நவநீதகிருஷ்ணன், சென்னை மதுசூதனன், திருநாவுக்கரசு போன்றவர்கள் எம்.ஜி.ஆரின் பொறுக்கி அரசியலின் செல்லப் பிள்ளைகள். இவர்களில் எவருக்கும் திராவிடம், தேசியம் என்கிற பேதமில்லை. ''எம்.ஜி.ஆரின் அண்ணாயிசம்''தான் இவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள சித்தாந்தம், பிழைப்புவாதம்தான் இவர்களின் லட்சியம், பொறுக்கி அரசியல் தான் இவர்களின் கொள்கை!

### பொறுக்கி அரசியலில் தேசியவாதிகளும் தஞ்சம் புகுந்தார்கள்

காங்கிரசின் ஜனநாயக சோசலிசப் பித்தலாட்டத்தை மக்கள் புரிந்து கொள்ளத் துவங்கி 1967 தேர்தலில் பல மாநிலங்களிலும் தோற்கடித்தனர். மத்தியிலும் அக்கட்சி அற்பப் பெரும்பான்மையே பெற்றது. கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) தான் காங்கிரசைக் காப்பாற்ற முடியும் என்று முடிவு செய்த இந்திரா, மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கிகள் தேச உடைமை, அரசுத்துறை தொழில்களுக்கு முக்கியத்துவம் போன்ற போலி சோசலிச நாடகமாடத் துவங்கினார். மொரார்ஜி, காமராஜ், பாடீல், சஞ்சீவரெட்டி, அதுல்யாகோஷ், சி.பி.குப்தா போன்ற பழம்பெரும் காங்கிரசு பெருச்சாளிகளுக்குப் பதிலாக ஜெகஜீவன்ராம், பக்ருதீன் அலி அகமது போன்ற பிழைப்புவாதத் தலைவர்களை அணிசேர்த்தார். இந்திராவுக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காக பொறுக்கி அரசியல் வழிமுறைகளில் கூட்டம் சேர்க்கத் தலைப்பட்டார். 1971 வங்க தேசப்போரும், தேர்தல் வெற்றியும் ஏற்படுத்திய செல்வாக்கு மங்கி, அரசியல்-பொருளாதார நெருக்கடிகள் முற்றியது. நாடெங்கும் மக்கள் போராட்டங்கள் வெடித்தபோது, அரசு எந்திரத்தைக் கொண்டு அவற்றை அடக்கிய அதேசமயம், பிழைப்புவாதிகளைக் கொண்டு அரசியல் முட்டுக் கொடுத்து காங்கிரசைத் தூக்கி நிறுத்தினார்.

> கட்சிக்காகப் பாடுபடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு "ஏற்பாடு" செய்து தருவதைத் தமது பொறுப்பாகவும் – அவர்களது உரிமையாகவும் பகிரங்கமாகவே ஒழுங்குபடுத்தினார், எம்.ஜி.ஆர்.

குஜராத், பீகார் போராட்டங்கள் வெடித்து, வளர்ந்து கடைசியாக இந்திரா தேர்தல் செல்லாது என்கிற தீர்ப்பு வந்து, அவரது ஆட்சியே ஆட்டங்கண்டபோது, நாடாளுமன்றத்துக்கு வெளியே நேரடியான மோதலில் எதிர்க்கட்சிகள் இறங்கின. இந்திரா காங்கிரசு முழுக்க முழுக்க பொறுக்கி அரசியலில் தஞ்சம் புகுந்தது. பணத்தை வாரி இறைத்து லாரிகளில் ஆள் பிடித்து வந்து இந்திரா வீட்டு முன்பு பேரணிகள் நடத்தப்பட்டன. சஞ்சய் காந்தி இந்திராவின் வாரிசாக மட்டுமல்ல, பொறுக்கிய அரசியல் தலைவராகவும் உயர்ந்தார். எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பிழைப்புவாதிகளின் குண்டர்படை கட்டினார். அவசரநிலை ஆட்சியின்போது உள்ளூர் அதிகாரம் அவர்களின் கைகளில்தான் இருந்தது.

அவசரநிலை ஆட்சிக்குப் பிறகு, பிரச்சாரங்கள், விளம்பரங்கள், கூட்ட ஏற்பாடுகள் உட்பட எல்லா தேர்தல் வேலைகளும்

தனிக்கட்சி தொடங்கி ஓட்டுப் பொறுக்கும் நடிகர் சரத்குமார்: சாதியமும் கவர்ச்சிவாதமும் பிழைப்புவாதமும் கலந்த வீரிய ஒட்டுரகப் பொறுக்கி அரசியல்.





படிப்பகம்

தொழில் ரீதியில் நடத்துபவர்களுக்கே ஒப்படைத்தது, காங்கிரசு. மற்ற தேர்தல் அரசியல் கட்சிகளும் அதைப் பின்பற்றத் தொடங்கின. டெல்லி, பம்பாய் போன்ற பெரு நகரங்களில் தேர்தல் கூட்டங்களுக்கு (ஆள் சப்ளை) மக்களைத் திரட்டித் தருவதையே தொழிலாகக் கொண்ட கும்பல்கள் உள்ளன. பீகார், மத்தியப்பிரதேசம், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் கிரிமினல் குற்றவாளிகளே எம்.எல்.ஏ.க்கள்-மந்திரிகளாகும் அளவுக்குப் பொறுக்கி அரசியல் வளர்ந்துள்ளது.

சஞ்சய் காந்தியின் பொறுக்கி அரசியலை எதிர்ப்பதாகவும், அரசியல் தரகர்களை ஒழிக்கப் போவதாகவும் ஆட்சிக்கு வந்தபோது சவடாலடித்தார் ராஜீவ். ஃபேர் பேக்ஸ், போபர்ஸ் விவகாரங்கள் அம்பலமாகி ராஜீவின் யோக்கியதைகள் தெரிந்துவிட்ட நிலையில், அவரும்

> பாமரத்தனமான சோசலிச – கம்யூனிச சித்தாந்தத்தைப் போலி கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்வதனால்தான், பொறுக்கி அரசியலின் கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) வெற்றி பெற முடிகிறது.

பேரணிகள் நடத்தத் துவங்கி விட்டார். நவீனப்படுத்துவது, தொழில்மயமாக்குவது, திறமை-நிர்வாகத்துக்கு முதலிடம் தரப்போவதாக சவடாலடித்தவர், கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) தான் தமது கொள்கையென்று தஞ்சம் புகுந்து விட்டார். பிழைப்புவாத அரசியல் கும்பலிடம் சரணடைந்து விட்டார். எம்.ஜி.ஆர் பாணியிலான ''இலவச அன்பளிப்பு'' திட்டங்களுக்காக நிதி ஒதுக்கி தேர்தலைக் குறி வைத்துச் செயல்படுகிறார். எம்.ஜி.ஆர். பாணியிலே சினிமா நடிகர்களைக் காட்டி ஓட்டுப் பொறுக்குவதில் இறங்கியுள்ளார்.

**நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதி நிலை-பொறுக்கி அரசியல்:**

காமராஜரின் காலத்தில் பண்ணையார் - முதலாளிகள் மாளிகையில் நடந்த சாதி அரசியல் வீழ்த்தப்பட்டு கருணாநிதியின் பொறுக்கி அரசியல் முன்னுக்கு வந்தபோது, ''பழுத்த ஜனநாயகவாதிகள்'' அருவெறுப்பாகப் பார்த்தார்கள். ஆனாலும் அண்ணாத்துரையின் ''பெருந்தன்மை'', கருணாநிதியின் ''நிர்வாகத் திறமை'', பிறகு எம்.ஜி.ஆரின் ''மனிதாபிமானம்'' ஆகியவற்றைச் சொல்லிச் சகித்துக் கொண்டார்கள். சஞ்சய் காந்தியின் அவசரநிலை ஆட்டங்கள், அந்தப் பழுத்த ஜனநாயகவாதிகளுக்குப் பீதியூட்டினாலும், ராஜீவ் பதவிக்கு வந்தபோது ''பரிசுத்தம்'' வந்ததென்று மகிழ்ந்து போனார்கள். இப்போது தமிழ்நாட்டில் வீரப்பன்-ஜெயலலிதா கும்பல்களும், டில்லியில் ராஜீவும் பொறுக்கி அரசியலை முழு வீச்சில் நடத்துகிறார்கள். அது ''பழுத்த ஜனநாயகவாதிகளுக்கு''ப் பீதியூட்டுகிறது.

''உலகிலேயே சிறந்தது, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை; சில பிழைப்புவாதிகள் அரசியலில் புகுந்து கெடுத்து விட்டார்கள். அரசியல் தரம் தாழ்ந்து போய்விட்டது'' என்று ''சமாதானம்'' சொல்கிறார்கள், போலி கம்யூனிஸ்டு கட்சியினரும், ஜனதா, காங்கிரசிலிருந்து ஒய்வு பெற்றவர்கள்-அரசியலுக்கு வெளியிலுள்ள ''பழம் தேசபக்தர்கள்'' ஆகிய ''பழுத்த ஜனநாயகவாதிகளும்.'' ஆனால், பொறுக்கி அரசியல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தர்க்கரீதியான இழிந்த இறுதிநிலை. காந்தியம், இந்து ராஷ்டிராம், இனவாதம், போலி சோசலிசம், போலி கம்யூனிசம் ஆகியவை அம்பலப்பட்டு தோற்றுப் போகும் நிலையில், நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு பொறுக்கி அரசியல் ஆளுமைக்கு வருகிறது.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் எல்லா போலித்தனங்களையும் வீசி எறிந்துவிட்டு, அப்பட்டமான பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படையை பொறுக்கி அரசியல் ஏற்படுத்துகிறது. பாசிசத்தை நிறுவுவதற்கு இனவாதம், தேசியவாதம், போலி சோசலிசம் அடங்கிய சித்தாந்தமாக தேசிய சோசலிசம் அதாவது நாஜிசம் - அமைந்ததைப் போல, கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) பாசிச ராஜீவ் கும்பலுக்கு உதவும். நாஜிக் கட்சியைப் போல பிழைப்புவாதிகளைக் கொண்ட காங்கிரசு, எம்.ஜி.ஆர், கருணாநிதி கட்சிகள் அரசியல் அமைப்பு அடிப்படையைக் கொடுக்கும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட ஆலை உற்பத்தியில் இருக்கும் தொழிலாளர்கள், பொருளாதாரவாதத்தின் செல்வாக்கில் இருக்கிறார்கள். போலி கம்யூனிஸ்டுகளின் பிழைப்புவாதக் கொள்கைதான் தொழிலாளர்களைப் பொருளாதாரவாதத்துக்குள் தள்ளிவிட்டது. மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தைத் திரித்து, பாமரத்தனமான சோசலிச, கம்யூனிச சித்தாந்தத்தைப் போலி கம்யூனிஸ்டுகள் பிரச்சாரம் செய்வதனால்தான் பொறுக்கி அரசியலின் கவர்ச்சிவாதம் (பாப்புலிசம்) வெற்றி பெற முடிகிறது. ஆகவே, தொழிலாளர்கள் தலைமையிலான தொழிலாளர் - விவசாயிகள் கூட்டை சமூக அடிப்படையாகவும், மார்க்சிய-லெனினியத்தை சித்தாந்த அடிப்படையாகவும் கொண்ட புரட்சிகர அமைப்பு மட்டுமே பொறுக்கி அரசியலுக்கு மாற்றாக இருந்து, அதை முறியடிக்க முடியும்.

● **ஆர்.கே.**

(புதிய ஜனநாயகம்,
1-15 மார்ச் 1988 இதழில் வெளிவந்த கட்டுரை)

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



திருச்சியில் நடந்த நவம்பர் புரட்சிநாள் விழாவில், மாவீரன் பகத்சிங், அரசி ஹஸ்ரத் மஹல், தந்தை பெரியார் மற்றும் பழங்குடியின கம்யூனிசப் போராளி வேடமிட்டுப் பார்வையாளர்கள் முன் தோன்றிய இளந்தோழர்கள்.

புரட்சி நாளையொட்டி, திருச்சி சட்டக்கல்லூரி பு.மா.இ.மு. வினர் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி, மார்க்சிய ஆசான்களின் உருவப்படத்துடன் பறைமுழங்க இவ்விழாவை இளமைத் துடிப்போடு நடத்தி, மாணவர்களிடம் புரட்சிகர கருத்துக்களை விதைத்தனர்.

தஞ்சையில், தோழர் லெனின் படம் அச்சிடப்பட்ட வாழ்த்து அட்டையுடன் இனிப்புகள் வழங்கி,செஞ்சட்டையணிந்து, விண்ணதிரும் முழக்கங்களுடன் நவம்பர் புரட்சி நாளை வாழ்த்தி, பகுதிக் கிளைகள் எங்கும் கொடியேற்று விழா நடைபெற்றது. மாலையில், பு.மா.இ.மு. தோழர்களின் நாடகம், சிறுவர்களின் கலைநிகழ்ச்சி, கவிதை உரைவீச்சு என உழைக்கும் மக்களின் பங்கேற்போடு வர்க்க உணர்வூட்டும் விழாவாக நடந்தது.

வேலூரில், ம.க.இ.க. சார்பில் நடந்த நவம்பர் சோசலிசப் புரட்சி நாள் விழாவில் முன்னணியாளர்கள் சிறப்புரையாற்ற, பெண்களும் சிறுவர்களும் நடத்திய பாடல் மற்றும் கவிதை வாசிப்பு நிகழ்ச்சி அரங்கை அதிர வைத்தது. விழா முடிவில் சாதி ஒழிப்புப் பண்பாட்டின்படி அனைவருக்கும் மாட்டுக் கறி விருந்தளிக்கப்பட்டது.

சேலத்தில்,செங்கொடியேற்று விழாவுடன், எழுச்சிகரமான முழக்கங்களுடன் பறையாட்டத்துடன் மூணாங்கரடிலிருந்து ஒன்பதாம் பாளி வரை ஊர்வலமாகச் சென்ற தோழர்கள், அங்கு பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி, தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர். முன்னணியாளர்களின் சிறப்புரைக்குப் பின்னர் நடந்த, ''நான் உலகம்'' எனும் இசைச் சித்திரம் திரளாக வந்திருந்த உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

உடுமலையில் நடைபெற்ற சிறுவர்களின் கலைநிகழ்ச்சி.



கோவையில், பு.ஜ.தொ.மு. அலுவலகத்தின் அருகே புரட்சிகர முழக்கங்களும் மகிழ்ச்சியும் ஆர்ப்பரிக்க கொடியேற்று விழாவை நடத்திய எஸ்.ஆர்.ஐ. ஆலைத் தொழிலாளர்கள், 500 பேருக்கு மேல் செஞ்சட்டைப் படையாக அணிவகுத்து, அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரி அருகே மாநகராட்சி திருமண மண்டபத்தில் நடந்த நவம்பர் புரட்சிநாள் விழாவை, தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தித் தொடங்கி வைத்தனர். தொழிலாளர்கள் தமது குடும்பத்தோடு பங்கேற்க, அரங்கம்



''தூங்குறியா நடிக்கிறயா... ரெங்கநாதா!'' திருவரங்கம் ரங்கநாதனை எள்ளிநகையாடும் தீண்டாமை எதிர்ப்பு பாடல் காட்சி.

நிரம்பிவழிந்த இந்த விழாவில் முன்னணியாளர்களும் பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசுவும், தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் மறுகாலனியாக்கத்தை வீழ்த்த அணிதிரண்டு போராட அறைகூவினர்.

உடுமலை அருகே ஆண்டியூரில் பு.ஜ.தொ.மு. சார்பில் பறைமுழங்க ஊர்வலமாகச் சென்று கொடியேற்றுவிழாவும், அதைத் தொடர்ந்து , சிலம்பாட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளோடு சிறுவர்களின் கலைநிகழ்ச்சியும் தெருமுனைக் கூட்டங்களும் நடந்தன.

ஓசூரில் பு.ஜ.தொ.மு. வி.வி.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து தமது அமைப்புகளின் கிளைகள்தோறும் இனிப்புகள் வழங்கி கொடியேற்றுவிழாவை நடத்தியதோடு, முழக்கமிட்டபடியே ஊர்வலமாகச் சென்று பாகலூரில் எழுச்சிமிகு தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர்.

போலி கம்யூனிஸ்டுகள் சோசலிசப் புரட்சித் திருநாளை திவசம் போல நடத்திவரும் நிலையில், இப்புரட்சிகரத் திருநாளை வர்க்க உணர்வூட்டும் திருவிழாவாக - பாட்டாளி வர்க்கப் பண்பாட்டு விழாவாக இப்புரட்சிகர அமைப்புகள் வளர்த்தெடுத்து வருகின்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

## "வதைமுகாம்களை நீக்கி ஈழத்தமிழ் மக்களை மீள் குடியமர்த்து! சிங்களக் குடியேற்றங்களை அகற்று! ராஜபக்சே அரசைப் போர்க்குற்றவாளியாக அறிவித்து நடவடிக்கை எடு!"

**– தமிழகமெங்கும் 16.11.09 அன்று புரட்சிகர அமைப்புகள் நடத்திய**

# ஆர்ப்பாட்டம்

**சிங்கள அரசே!**
ஈழத் தமிழ் மக்களை அடைத்து வைத்திருக்கும்
வதை முகாம்களை நீக்கு!
மக்களைத் தத்தம் வசிப்பிடங்களில்
மீள் குடியமர்த்து!
அவர்களுடைய விவசாயம், தொழில்களைப்
புனரமைத்துக் கொள்ள நிதி உதவி செய்!
ஈழத் தமிழ்ப் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும்
சிங்கள குடியேற்றங்களை அகற்று!

**இந்திய அரசே!**
சிங்கள அரசின் தமிழின அழிப்புச் சதிக்குத்
துணை நிற்காதே!
மேலாதிக்க நோக்கத்துக்காக
ஈழத்தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமிக்காதே!

**ஐக்கிய நாடுகள் மன்றமே!**
ராஜபக்சே அரசைப் போர்க்குற்றவாளி என
அறிவித்து நடவடிக்கை எடு!
வதை முகாம்களை நீக்கி ஈழத்தமிழ்
மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடு!


திருச்சியில்...



ஓசூரில்...


விழுப்புரத்தில்...



நாமக்கல்லில்...


வேலூரில்...